# புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்]　　1942-ம்ஞ ஜூலைமீ 18உ　　[ந. 104

பிரஸங்கம் CIV.

## "சரித்திரத்திற்கே புதிதான கோர சம்பவம்".

### யூதர்களுக்கு நேர்ந்த வதை.

#### மறக்கமுடியாதது.

பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தின் முன்பு இவ்வாரத்தில் செய்தி இலாகா மந்திரி மிஸ்ட்டர் பிரென்டன் பிராகன் பேசியது:—

"பூரா விவரமும் வெளிவந்தபொழுது அங்கு நடந்த அட்டூழியங்களைப் போல் தேச சரித்திரத்தில் இதுவரை காணப்படவில்லை என்று தெரியவரும்.

"மொத்தத்தில் 7 லக்ஷம் யூதர்கள் மட்டில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவ்வித கோரச் செய்கை இதற்குமுன் நடந்ததாகத் தெரியவில்லை. அதனால் ஜெர்மானியர்கள் தங்கள் கொடிய நடத்தையால், மிருகத்தன்மை வாய்ந்தவர்கள் என்று பெயரெடுத்துவிட்டார்கள். இம்மாதிரி வேறு எந்த ஜாதியினரும் இழிவாக நடந்து கொள்ளவில்லை.

"இவ்வித அட்டூழியங்களைச் செய்தவர்களுக்குச் சட்டப்படிக்கு தகுந்த தண்டனை விதிக்கப்படுமென்று கவர்ன்மெண்டு மெம்பராகிய நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இவர்கள் யாவரும் கொலைசெய்த குற்றவாளிகளைப் போலவே நடத்தப்படுவார்கள்.

"இவ்விதக் குற்றச் செய்கைகளுக்குப் பொறுப்பாளிகளின் பெயர்களைக் குறித்துக்கொண்டு, அவர்களுக்குச் சட்டப்படிக்குள்ள கடுமையான தண்டனையை விதிக்கவேண்டுமென்று யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிடன், நேசநாடுகள் இவைகளின் அரசாங்கங்கள் ஏகோபித்து ஒப்புக்கொண்டன.

"போலந்திலும், இன்னும் மற்ற எதிரி ஆக்கிரமித்த நாடுகளிலும் அட்டூழியங்களை நடத்திவரும் மிருகத் தன்மைவாய்ந்தவர்கள் மேற்சொல்லிய விஷயத்தை உணர்ந்துகொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்".

இது சரியான சமயத்தில் செய்யப்பட்ட ஒரு எச்சரிக்கையாகும். ஹிட்லரின் ஆதிக்கம் ஐரோப்பாவில் பரவப் பரவ யூதர்களை வதை செய்வது சம்பந்தமான விவரங்கள் நமக்குத் தினம் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. அச்செய்தி மிகப் பயங்கரமானது. ஆஸ்திரியா, போலந்து, செக்கோஸ்லாவாகியா, ருமேனியா பல்கேரியா, ஹங்கேரி, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய பாகங்களிலிருந்து யூதர்கள் துரத்தப்படுவதோடு கொலையும் செய்யப்படுகின்றனர். அடியோடு அழிக்கவும் படுகின்றனர். யூதர்களுக்குச் சொந்தமான நிலம்பலங்களெல்லாம் பிடுங்கப் பட்டதால், வீடுவாசல் முதலியவை இல்லாமல் துரத்தப்பட்டனர். தற்சமயத்தில் ஹிட்லரின் கொலைக்களத்தில் நேரும் சிரமங்களைக் கவனிக்குமகால், பண்டைகாலத்தில் யூதர்களுக்கு ஏற்பட்ட துன்பம் பெரிதாக ஆகாது. ஷைலக் என்ற யூதனையாவரும் நிந்தித்து, நாய்களை விட்டுத் துரத்தி அடித்ததுகூட சின்ன விஷயம்தான்.

யூதர்கள் பண்டை காலத்திய ஐரோப்பிய நாகரீகத்தையுடையவர்கள். புராதனமான பழக்கமும், பயிற்சியும் கொண்டவர்கள். தைரியமான உணர்ச்சி பொருந்தியவர்கள். அதனால் முகம்மதிய பரோக்கியர்களின் (Pharoahs) துன்பம் தாங்காது வெளியேறினர்கள். எப்போதும் இவர்களுக்குத் துன்பம் தான் அனுபவமாக இருக்கிறது. பிறருக்குள்ள சௌக்கியம் இவர்களுக்குக் கிடையாது. இருந்தாலும் மற்ற நகரவாசிகளுக்குள்ள ஸ்வதந்திரத்தை அடைந்திருக்கின்றனர். தொழிற்சாலைகளையும், லேவாதேவித் தொழிலையும் நடத்திவருகின்றனர். கல்பனா சக்தி நிறைந்த ரஸாயன சாஸ்திரிகளாகவும், நூதன சாமான்களைக் கண்டுபிடிக்கிறவர்களாகவும் இருந்து பெரும் கௌரவத்தையடைந்திருக்கின்றனர். பல இடங்களில் குடியேறி தற்சமயம் 160 லக்ஷம் யூதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் யாவருக்கும் பொதுப்படையான சம்பந்தமும் இருக்கிறது. யூதர்களின் ஜியோன் (Zion) கொள்கையை ஒரு நாளும் குலைக்கமுடியாது. இப்பேர்ப்பட்டவர்களை ஐரோப்பிய தொந்தரவுகளுக்குக் காரணமாக ஹிட்லர் கருதுகிறான். காட்டுமிராண்டியின் தன்மையுடன் யூதர்களை நடத்திவருகிறான். இவனுடைய கொடிய தொழில், மேலும் மேலும் விருத்தியாகுமோவென்ற பயம் இருக்கிறது. கொஞ்ச நாள் கழித்து இந்தக் கொடுமைகள் நீங்கினாலும், மனதில் எப்போதும் இருக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. மறந்துபோகாமல் இருக்கும்படிக்கு மிஸ்ட்டர் பிரென்டன் பிராகன் நினைவு மூட்டியிருக்கிறார். மனிதவர்க்கத்திற்கு விரோதமான செய்கைகளைச் செய்யும் நாஸிகளுக்குச் சமீபத்திலேயே கடுமையான தண்டனை ஏற்படும்.

யூதர்களை வதை செய்யும் கதைகளைப்பற்றி இரண்டு பத்திரிகைகளிலிருந்து எடுத்து சிலவிவரங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன.

## ஸெக்ஷன் A.

## ருமேனியா.

## "கொடுமை முறை".

(மிஸ்ட்டர் ரால்ப் பார்க்கர் எழுதியது).

('19.வது நூற்றாண்டும், அதன் பிறகும்' என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

### ருமேனியா.

ருமேனியாவில் சைனிய ஆட்சி ஸ்தாபிக்கப்பிட்டது முதல் யூதர்களின் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. அதற்கு முன்பும், பெஸரேபியா, வடபுகோவின் இவைகளை ருஷ்யாவிற்குக் கொடுத்ததால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு யூதர்கள் அதிகமான பணத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது. ருமேனிய சைனியம் திரும்பிப் போகும்போது யூத் மக்களால் அவமதிக்கப்பட்டது என்ற பொய்க் காரணத்தை வைத்துக்கொண்டு யாஸி (Yassy), டோரோஹோய்

(Dorohoi), கலாடி (Galati) முதலிய இடங்களில் டோரோஹோயில் 245 பேரும், புகோவினில் 350 பேரும், ஹூஸியில் 100 பேரும் கொலை செய்யப்பட்டனர்.

சைனிய ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்தும் திட்டமான கொலை நடந்தேறியது. யூதர்களின் சொத்து பறிக்கப்பட்டது. சில நகரங்களிலிருந்தும் துரத்தப்பட்டனர். பான்ஸியு (Panciu) என்ற நகரிலிருந்த 150 யூதர் குடும்பங்கள் 24 மணி நேரத்தில் காலி செய்து வீடுவாசல்களை விட்டு ஓடும்படி செய்யப்பட்டன. இதற்கு சில வாரங்கள் கழித்து இந்நகரம் பூகம்பத்தில் அழிந்தது. அப்போது அங்கே ஒரு யூதர்கூட இல்லை. புஸாவூ (Buzau) என்ற நகரிலிருந்த யூத வாலிபர்களும் (Zion) ஜியன் சங்கத்தைச் சார்ந்த தலைவர்களும் கைதியாக்கப்பட்டு ஜெயிலில் துன்புறுத்தப்பட்டனர். வாஸ்லூயி (Vaslui) என்ற இடத்திலும் இவ்விதம் தான் நேர்ந்தது. காம்புலங் (Campulung) என்ற இடத்தில் யாம் கிபூர் யூத உத்ஸவத்தின்போது யூதச்சங்கத்தின் தலைவன் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, ஒரு வண்டியில் கட்டப்பட்டு அவனுடைய சொந்த பிள்ளையால் தெருக்களில் ஓட்டப்பட்டான்.

### கான்ஸ்டான்ஸா.

கான்ஸ்டான்ஸா யூதர்களுக்கு 50 லக்ஷம் லியர் நாணயமும் யாஸியிலுள்ளோருக்கு 60 லக்ஷமும் அபராதம் விதிக்கப்பட்டது. யூத வியாபாரிகளின் சொத்துக்களுக்கு குத்துமதிப்பாக ஒரு விலையை வைத்து ஜெர்மானியர் கொண்டுபோகின்றனர். இதை 'ருமேனியப் பழக்கம்' என்று ராணுவ ஆட்சிக்காரர்கள் சொல்லுகின்றனர். தங்களை ரயில் வண்டிகளிலேயே கொன்றுவிடுவார்களென்றும், அல்லது வெளியில் எறிந்துவிடுவார்களோ என்றும் பயந்து யூத வியாபாரிகள் பிரயாணமே செய்வதில்லை. ருமேனியக் குடியானவர்கள் ஒரு ராணுவத் தலைவனை ஓபார் (Obor) நகரத்தின் சந்தையில் கொலை செய்ததற்காக யூதர்கள் அவஸ்தைப்படவேண்டியிருந்தது. கொலையாளியைக் கண்டு பிடிப்பதற்காகப் புறப்பட்ட போலீஸ்காரர்கள் யூதர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையிட்டனர். தாங்கள் தான் காரணம் என்று பலாத்காரத்தினால் சொல்லச் சொல்லி ஜேகப் க்ரோப்பர், பால்புலாஸிரியனவ் என்ற யூத கவிகளும், ஸில்வியோ டாமயோ, என்ற தலைவனும் நிர்ப்பந்திக்கப்பட்டு கொல்லவும்பட்டனர். கம்யூனிஸ்டு கக்ஷியைச் சேராமலிருந்தும் ஜியன் பத்திரிகை ஒன்று எல்பிம் என்பவன் பெயரால் இருப்பதாகக் குற்றம் சாட்டி அவனுக்கு 50 அடிகள் கொடுக்கப்பட்டன. பாகௌவ்வில் (Becau) இருக்கும் பணக்காரர்களான பீல்டர்மான் சகோதரர்கள் கைதி செய்யப்பட்டு துனபப்படுத்தப்பட்டனர். கிளீன் (Klein) என்பவனும் கைதியாகி கொலை செய்யப்பட்டான். அவனுடைய பிரேதத்தை அவனது குடும்பத்தார்களாகத் தேடி எடுத்துச் செல்லவேண்டி வந்தது.

யூத வக்கீல்களும், வைத்தியர்களும் யூத மக்களிடம் தான் கேசுகளை வைத்துக்கொள்ளலாம். ஆயிரக்கணக்கான வேலைக்காரர்கள் முன்னெச்சரிக்கையில்லாமலே விரட்டப்பட்டனர். ஜீவனத்திற்கு வேறு வழியில்லை. தொழிற்சாலைகளில் யூதர்களுக்கு ஸ்தானமே கிடையாது. யூத மக்களுக்கு ஏற்பட்டுள்ள கவலையும், ஆபத்தும் சொல்ல முடியாதபடி அதிகரித்துக்கொண்டே போகின்றன. இந்த நிலைமையைப் பரிசீலனம் செய்வதற்கு யூத ஸ்தாபனங்களுக்கு சக்தி கிடையாது. கூட்டம் கூட்டமாகத் தனியே வசிக்கவேண்டியதுதான். மார்க்கங்களிலுள்ள ஆபத்துகளால் பிரயாணம் செய்யமுடியாது. எங்கும் இந்த கலவர நிலைமை இருக்கிறது. கூட்டமாக தேசத்தை விட்டுச் செல்லலாமென்றும் யோசிக்கப்பட்டது. ஆனால் பாலஸ்தீனத்திற்கு அனுமதிச் சீட்டு பெற்றவர்கள் தான் வெளியேற முடியும்.

### கொலை.

வெளிப்படையான கலகம் ஏற்படுவதற்கு முன்பும், ஜெனரல் அன்டோனெஸ்கூவுடன் ஹொரியாஸிமா ஒத்துழைத்து வந்த சமயத்தில் நூற்றுக்கணக்கான யூதர்கள் கைதி செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷன்களுக்குக் கொண்டு போகப்பட்டனர். வெளிப்படையாக ஏற்பட்ட கலகத்தை அடக்குவதற்கு

முன்னமேயும், 10, 20 பேர்களடங்கிய கூட்டத்தினர் யூதர்களின் வீடுகளில் புகுந்து சொத்துக்களையும், ஜனங்களையும் கொள்ளையடித்துத் தொந்தரவு செய்தனர். அப்படி கைதி செய்யப்பட்டவர்களில் டாக்டர்களும், வக்கீல்களும், சில வியாபாரிகளும், ஐரோப்பாவிலிருந்து ஓடிவந்த சிலரும் சேர்ந்துள்ளனர். பலவழிகளில் இவர்களைக் கொலைசெய்யப்பட்டது. கைதி செய்யப்பட்டுள்ள இடங்களிலேயே 11 யூதர்கள் சுடப்பட்டனர். நூற்றுக்கணக்கான பேர்கள் ஜிலாவா காடுகளில் வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய் 5, 6 பேர்களாக நிறுத்தி வைக்கப்பட்டு,யந்திர பீரங்கிளால் சுடப்பட்டனர். பனீஸா (Baneasa)காடுகளிலும் இதேவிதமாக நடந்தது. மற்றொரு சமயத்தில் சில கைதிகள் ஆடுமாடுகளைக் கொலைசெய்யும் ஆயுதங்களால் கொல்லப்பட்டனர். பிறகு இவர்களின் பிரேதங்களை எடுத்துச்செல்ல அவர்களின் குடும்பத்தினருக்கே சொல்லி அனுப்பப்பட்டது. அதற்குமுன் இவர்களின் பிணங்கள் மாமிசத்தைத் தொங்கவிடும் கம்பிகளில் தொங்கிக்கொண்டிருந்தன. சில இடங்களில் பூரா குடும்பங்களும் அழிக்கப்பட்டன. பாட்டன், தகப்பன், பிள்ளை ஆகிய மூன்று தலைமுறைகள் ஒரே சமயத்தில் அழிக்கப்பட்டன. ஸருலெஸ்டியில் ஹோரியா, ஸிமாவின் தோட்டத்தில் பெர்ன் ஹார்டு காப்மான் என்பவனும், அவன் மகனும் கொல்லப்பட்டனர். இவர்கள்தான் ருமேனியப் பஞ்சு யந்திர சாலைகளை ஸ்தாபித்தவர்கள். அதே விதமாக உலோக சாமான்களைச் செய்யும் தொழிற்சாலைகளின் சொந்தக்காரனான கட்மான் மார்கஸ் என்பவனும் அவனுடைய மருமகனும், இரண்டு பிள்ளைகளும் சுடப்பட்டனர் ஒரே சமயத்தில் 300 யூதப் பிணங்கள் தொங்கிக் கிடந்ததை நான் நேரிலேயே கண்டேன். யூத புதைகுழியில் புதிதாக 800 பேர்கள் புதைந்து கிடந்ததை நான் கண்டேன். இன்னும் ஆயிரக்கணக்கான யூதர்களின் அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை.

ஜெனரல் அன்டோனெஸ்கு மிக ஆடம்பரத்துடன் பேசும் சமயங்களில் இவ்வித மிகக்கொடிய சம்பவங்களைப்பற்றி ஒன்றுமே சொல்லுவதில்லை. திருடு, கொள்ளை முதலியவைகளைப்பற்றிச் சொல்லுவானே தவிர கொலைகளைப்பற்றி மௌனம் சாதிக்கிறான்.

## கொள்ளை.

யூதர்களை ஒழிக்க நினைப்பது ஜெர்மானியரின் முறைதான். ஜெர்மனிக்கு உட்பட்ட மத்திய, தென் கிழக்கு ஐரோப்பிய பாகங்களில் தொழிற்சாலைகளை நடத்தும் யூதர்களும், யூதர்களின் சம்பந்தம் இருக்கிறவர்களும் உடனே ஜெர்மன் கமிஷனர் ஒருவரிடம் தன்னைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். இவர்களுக்கு மறுபடி தொழில் கொடுக்கப்படுகிறது. ஆனால் கொஞ்ச நாள் ஆனதும் ஜெர்மனியின் நன்மைக்கோ, அல்லது அந்தக் கமிஷனரின் நன்மைக்கோ உபயோகப்படுத்தப்படும். ஹிட்லரின் புதுத்திட்டத்தின் கீழ் ஆக்கிரமித்த நாடுகளின் சொத்தைக்கொண்டே நரிபோன்ற இந்தக் கமிஷனர்கள் பிழைக்கின்றனர்.

## திருடனுக்கும் திருடன்.

சில சந்தர்ப்பங்களில் யூதர்களுக்கு நியாய விசாரணை ஏற்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது. அதற்கும் ஜெர்மானியர் ஏதோ ஒரு லக்ஷியத்தைக்கொண்டு தான் ஏற்படுத்தியிருக்கின்றனர். வீனர் நாஸ்டாட் (Wiener Neustadt) என்ற இடத்திலுள்ள மாஜிஸ்திரேட் ஒரு விசித்திரமான தீர்ப்பு சொல்லியிருந்தான். பிரான்ஸ் லென்ஹார்டு (Franz Lenhardt) என்ற ஒருவன் இரண்டு யூதர்களின் கடைகளைக் கொள்ளையடித்ததற்காக எட்டுமாதம் ஜெயிலில் உழைக்கும்படி தண்டிக்கப்பட்டான். இந்த சம்பவம் 1938-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஆஸ்திரியாவை ஹிட்லர் அபகரித்த பிறகு நேர்ந்தது. மாஜிஸ்திரேட் செய்ததைப் பார்த்தால் யூதர்களுக்கும் சட்டம் பந்தோபஸ்து அளிக்கிறதாகவே சொல்லலாம். ஆனால் நியூஸ்வீனர் டாஜ்பிளாட் (News Wiener Tageblatt) என்ற பத்திரிகை ஒரு கதையையும் சேர்த்து இந்த விஷயத்தைப் பிரசுரித்தது. லென் ஹார்டு ஒரு 'திருடனுக்கும் திருடனாம்'. யூதர்கள் திருடர்களாம். ஆகவே இவனைப்போன்ற கூட்டத்தினர்கள் கொள்ளைத் தொழிலைச்செய்து ஹிட்லரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறார்கள்.

## ஸெக்ஷன் B.

## போலந்து.

## "17,000 யூதர்கள் கொலை செய்யப்பட்டனர்".

(மிஸ்ட்டர் நெக்ளி பார்ஸன் எழுதியது).

### ஜாதிபேதம்.

ஜெர்மனியிலுள்ள யூதர்களுக்கு ஜெர்மானியர்கள் செய்யும் கொடும் செய்கைகளைக் காட்டிலும் இன்னும் அதிகக் கொடுமையாக, போலந்தில் அவர்களால் நடத்த முடியாதுபோல் தோன்றும். உண்மையில் அங்கு அப்படி ஒன்றும் கொடுமை செய்யாமல் இருந்ததாகவும் காணப்படவில்லை. ஆனல் ஜெர்மனியில் மொத்த ஜனத்தொகையில் யூதர்கள் 100-க்கு 1-பங்குதான் இருக்கிறார்கள். ஜெர்மன் ஆக்கிரமித்த போலந்தில், அவர்கள் மொத்த ஜனத்தொகையில் பத்து சதவிகிதம் இருக்கிறார்கள். அவர்கள் யூதர்கள்மேல் கொண்டிருக்கும் அருவருப்புக்கு இது ஒரு புதிய பிரச்னையாக இருக்கிறது. மேலும் போலந்திலுள்ள யூதர்களும், இன்னும் அங்குள்ள இதர பிரஜைகள் கொண்டிருக்கும் பொதுவான நோக்கமான நேசநாட்டினருக்கு வெற்றியும், போலந்துக்கு ஸ்வதந்திரமும் கிடைக்கவேண்டுமென்ற விருப்பத்திற்கு இணங்கியிருக்கிறார்கள்.

போலந்தில் யூதர்களையும், இதர பிரஜைகளையும் தனியாகப் பிரித்துவைக்க ஜெர்மன அதிகாரிகள் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. நாஸிகள் எவ்வளவு கொடுமையாக நடத்தினலும்கூட பிரிவினை சாத்தியப்படவில்லை.

ஜெர்மானியர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் திகைத்தார்கள். லாட்ஸிலிருந்து 1940, மார்ச்சு, 8-ம் தேதியில் வந்த அறிக்கையில் 'ஜெர்மன் ரகஸியப் போலீஸ் பிரதிநிதிகள், ஏராளமான யூதர்களைப் பிடித்து, கைகளைக்கட்டி, தெருவின் குறுக்கே உயரமாக அப் பரிதாபகரமான யூதர்களின் கால்கள் தரையில் பாவாதவிதமாகத் தோரணங்களாகக் கட்டித் தொங்கவிட்டார்கள்,' என்று கண்டிருக்கிறது.

அம்மாதிரி தொங்கவிடப்பட்ட மனிதன் வெகுகாலம் ஜீவித்திருக்கமுடியாது. ருஷ்யப்படை வீரர்களில் கீழ்தரத்தில் இருந்தவர்கள்கூட இந்தக் காக்ஷியைக் கண்டு அருவருப்புக்கொண்டு கலகம் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த மிருகத்தன்மையான கொடுமைகளின் பயனக, ஜெர்மன் போர் வீரர்களில் சிலர் தற்கொலை செய்துகொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

### நாடோடிகள்.

தற்சமயத்தில் ஜெர்மன் ஆக்கிரமிக்கப்பட்ட போலந்திலுள்ள 20 லக்ஷம் யூதர்களும், நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டவர்களின் ஸ்திதியில் இருக்கிறார்கள். யாரும் அவர்களைத் தாராளமாகக் கொலை செய்யலாம். ஜெர்மன் ரகசியப் போலீஸார்மட்டுமல்ல, மற்ற போலந்திலுள்ள எந்த ஜெர்மானியனும் அவர்களைக் கொல்லலாம். அவர்கள் மானிட ரூபம்கொண்ட தொத்து நோய் பரவச்செய்யும் புழுவாகக் கருதப்படுகிறார்கள். அதனல் தண்டனைக்குட்படாமல் யூதர்களைத் துரத்தலாம். போலந்து தேசத்தார்களுக்குத் தோன்றும்படி ஜெர்மானியர்கள் கொண்ட அடிப்படையான எண்ணம், போலந்துக்காரர்களிடமிருந்த நாஸ்திக் கொள்கையைக் குறைத்துவருகிறது. போலந்துக்காரர்களும் யூதர்களுடன் சேர்ந்து கஷ்டப்படுவதினல், அவர்களுக்கு உண்மையான கிருஸ்துவ மதப் பற்று வளர்ந்துவருகிறது. அவர்களைக் காட்டிலும் இன்னும் அதிகக் கஷ்டம் அனுபவிக்கும் ஜனங்களிடம் அவர்களுக்கு அதிக அனுதாபம் ஏற்படுகிறது. இதெல்லாம் ஜெர்மானியர்கள் அவர்களிடம் நடந்துகொள்ளத் தெரியாமல் நடந்துகொண்டதினல் உண்டானது.

## அடிமைத்தனத்தின் சின்னம்.

போலந்தில் யூதர்களுக்கு எதிரியாக ஜெர்மானியர்கள் கொண்டிருக்கும் கொள்கையானது உண்மையில் குழப்பத்தை உண்டாக்கியிருப்பதாகத் தோன்றுகிறது. எல்லாவற்றையும் அனுசரித்து நடக்கும் முறையில் ஒன்றும் ஒழுங்குப்படுத்தப்படவில்லை. போலந்திலுள்ள மஞ்சள் நிற முக்கோட்டுச் சின்னத்தை யூதர்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. 1939-ம் டிஸம்பர்ீ 1-ம் தேதி முதல் வாரிஸா கிராக்கோ, ஸெஸ்டோசோவா இந்த ஊர்களில் உள்ள யூதர்கள் இச்சின்னத்தை அணிந்துகொள்ளவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டது. ஆனால் அதில் வெள்ளைக் குஞ்சமும், நடுவில் டேவிட்டின் நீல நக்ஷத்திரம்போல் அடையாளமும் இருக்க வேண்டுமென்றும் கண்டிருந்தது. லோட்ஸ், லாக்லாவக், (Wloclawek) லப்லின் இந்த இடங்களில் நவம்பர்ீ 12௳ முதல் யூதர்கள் மஞ்சள்நிற சின்னத்தைத் தரித்துக்கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டார்கள். வேறு சில நகரங்களில் யூதர்கள் வழக்கப்படி மஞ்சள் நிறச் சின்னத்தையும், முதுகில் மஞ்சள் பட்டையையும் தரித்துக்கொள்ளும்படி ஜெர்மன் அதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

நமக்கு இத்தகைய வித்தியாசங்களில் யாதொரு பொருட்டுமில்லையென்று தோன்றியபோதிலும், யூதர்களுக்கு அவை மிகவும் அவமானத்தை உண்டாக்குகின்றன. இதனால் நாஸிக் கொள்கையில் ஒற்றுமையில்லை என்பது தெரியவரும்.

யூதர்களின் கடைகளும் வித்தியாசத்தைக் காட்டக்கூடிய யூதர்களின் அடையாளங்களைக் காட்டும்படி கட்டளையிடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக வெள்ளைத்துணியில் டேவிட்டின் நீலநிற நக்ஷத்திரம் இருக்கவேண்டும். இந்த உத்தரவைப் பிறப்பிவிக்கும்பொழுது, வார்ஸாவிலிருக்கும் ஜெர்மன் ஜில்லாத் தலைவன் ஒரு யூதனின் குணதிசயத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். அந்த விமர்சனமானது ஜெர்மனியில் வழங்கப்படும் சட்ட திட்டங்களுக்கும், ஜாதி ஆசாரங்களுக்கும் நேர்மாறானது. அதைப்பற்றி டாக்டர் பிஷ்ஷர் சொல்லுவதாவது :—

"1939-ம் அக்டோபர்ீ 1-ம் தேதியில் யூதர்களின் ஜாதியில் சேராத நகரவாசிகள் எல்லாம் யூதர்களாகக் கருதப்படமாட்டார்கள்" என்றார்.

## வம்ச பரம்பரை.

ஜெர்மனியில் டாக்டர் கோயபல்ஸ் மூதாதையர்களின் வம்ச பரம்பரையைப்பற்றி கிளறிக்கொண்டிருப்பது உலகத்தில் யாவருக்கும் தெரியும். யூதர்களின் இரத்தக் கலப்பு இருக்கிறதாவென்று வெகுவாக ஆராய்ச்சி செய்யப்படுகிறது. யார் யூதன் என்று கண்டுபிடிப்பதற்காக நாஸிகள் போலந்தில் கையாண்டு வரும் முறையிலிருக்கும் வித்தியாசத்தை இதிலிருந்து கண்டுகொள்ளக்கூடும். ஆனால் அவர்கள் யூதர்களின்பேரில் தாங்கள் கொண்டிருக்கும் பக்ஷம், பிரியம் அதிகமாகிறதென்பதைக் காட்டவில்லை. இக்கொள்கை ஏதோ பெரிய பிரச்னையை நாஸிகள் கிளப்புகிறார்கள் என்பதைமட்டில் காட்டுகிறது.

இந்தப் பிரச்னையில் நானே ஒரு உதாரணம் கொடுக்கக்கூடும். 1938-ம் ஹார்ஸ் மலைகளில் ஒரு ஜெர்மன் 'யூ' படகுத் தலைவனை சந்தித்தேன். அவன் முதல்தரமான ஜெர்மானியன். நாஸிக்கொள்கையில் ஆர்வமான பற்றுக் கொண்டவன். "மூழ்கின கப்பற்படை", அதாவது ஸ்கேப்பாபுளோ (Scapa Flow)-வில் சரணடைந்த ஜெர்மன் கப்பற்படையை எப்படி ஜெர்மானியர்கள் மூழ்கடித்தார்கள் என்ற கதையை எழுதினவன். நான் பார்த்தபொழுது அவனிடம் ஒரு பைசாகூட கிடையாது. அவன் ஒரு வேடுவன் குடிசையில் வசித்துவந்தான். கோடைகாலத்தில் பணமிருந்த பிரயாணிகள் வரும்பொழுது அவனும் அவன் குடும்பத்தார்களும் அக்குடிசையைக் காலிசெய்யவேண்டும். தீரச்செயல் செய்யக்கூடிய 'யூ' படகுத் தலைவனுக்குள்ள எல்லா கௌரவச் சின்னங்களும் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் அவனுடைய மகனாவது, அவனுடைய

அழகுள்ள மகளாவது ஜெர்மன் பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடாது. ஹிட்லர் இளைஞர் கிளர்ச்சியிலும் அவர்கள் சேரக்கூடாது. அவர்கள் பறையர்கள். ஏன்? அவர்களின் தாயார் யூதனுக்கும், யூதனில்லாதவனுக்கும் பிறந்தவள்.

### கட்டாய வேலை.

14 வயதிலிருந்து 60 வயதுக்குட்பட்ட போலந்திலுள்ள எல்லா யூதர்களும் கட்டாயவேலை செய்யக் கடமை பட்டவர்கள்.

### ஊரைவிட்டுக் காலி செய்வது.

3-வது ரீச்சுடன் இணைக்கப்பட்ட போலந்து பிராந்தத்திலிருக்கும் யூதர்களுக்குத்தான் கேவலமான கதி ஏற்பட்டிருக்கிறது. லோட்ஸ் நகரத்தில் 60 லக்ஷம் ஜனங்கள் உண்டு. அதில் 20 லக்ஷம் பேர்கள் யூதர்கள். 1940-ம் ஜனவரி 13உக்குள் எல்லா யூதர்களும் லோட்ஸ் நகரைவிட்டு வெளிச் செல்லவேண்டுமென்று ஜெர்மானியர்கள் கட்டளையிட்டார்கள். இம்மாதிரி கூட்டங்களாக வெளியே செல்லவேண்டிய ஏற்பாட்டை யூதர்களே செயய வேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள். ஜெர்மன் ரகசியப் போலீஸார் கைக்குத் தப்பும்படி குறிபிட்ட காலத்திற்குள் இம்மாதிரி வெளியே செல்வது அசாத்தியமாக இருக்குமோவென்று யூதர்கள் பயந்தார்கள். தினசரி 1,700 பேர்கள் வீதம் வெளிக் கடத்தப்பட்டார்கள். வார்ஸாவை நோக்கி கால் நடைகள் ஏற்றிச்செல்லும் வண்டிகளில் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். ரயில்வே ஜங்கிஷன்களில் கூட்டம் அதிகமாய் விட்டது. வண்டிக்காக ஆண், பெண், சிசுக்களும், நோயடைந்தவர்களும், 4, 5 நாள் அன்னம், தண்ணீர் இல்லாமல் இருந்தார்கள். லோட்ஸிலிருந்து வார்ஸா வரையிலும் 90 மைல்கள் செல்வதற்கு ஒரு வாரம் பிரயாணம் செய்த ரயில் வண்டிகளில் ஒன்றில் 8 இறந்த குழந்தைகளின் சவங்கள் வெளியே எடுக்கப்பட்டது.

### அயோக்கியத்தனம்.

யூதர்களின் கோவில்களை ஜெர்மானியர்கள் தீ வைத்தார்கள், யூதர்களே அவற்றைக் கொளுத்தினதாகச் சொன்னார்கள். குரோஜக் என்ற இடத்தில் யூதர்களையே அவர்களின் கோவிலுக்கு தீ மூட்டும்படி ஜெர்மானியர் நிர்ப்பந்தித்தார்கள். லக்லாவக்கில் (Wloclawek) பெரிய கோவிலை நெருப்பு வைத்துவிட்டு பொதுக் கட்டடங்கள் அழிந்ததற்காக அந்த யூத ஜாதியார்கள் பூராவும் 60 லக்ஷம் (Zlotys) நாணயங்கள் அபராதம் கொடுக்கும்படி தண்டனை விதித்தார்கள்.

### கொலை.

அங்கு படுகொலைகள் நடந்தன. வார்ஸாவில் நெலுவிக்கித் தெருவில் 9-ம் ந. வீட்டில் 22—11—39-ல் 55 யூதர்கள் கொலை செய்யப்பட்டார்கள். செல்மிலிருந்து ரூபியஸ்ஸோ என்ற இடம் வரையிலுள்ள ஜெர்மன்-ஸோவியத் மார்க்கத்தில் அவர்கள் வேகமாக ஓடாத காரணத்திற்காக, ஏற்றிச்சென்ற 85 யூதர்கள் சுடப்பட்டார்கள். டிஸம்பர் 15உக்கு முன் ஆயுதங்கள் வைத்துக் கொண்டிருக்கும் குற்றச் சாட்டுக்காக லோட்ஸில் 41 யூதர்களும், கீல்ஸில் 4 பேரும், ஸிஸ்டோ சோவாவில் 9 பேரும், கிராக்கோவில் 3 பேரும், ஸைராடோவில் 2 பேரும், காடோவிஸில் 5 பேரும், கொலை செய்யப்பட்டார்கள். கிராக்கோவில் புராதனமாக யூதர்கள் தங்கியிருக்கும் காஸிமிர்ஸில் ஜெர்மானியர் 3 நாட்கள் வேட்டையாடினார்கள். டிஸம்பர் 18, 19, 20 தேதிகளில் 180 யூதர்கள் கொலை செயயப்பட்டார்கள்.

போலந்தில் ஆக்கிரமித்திருக்கும் ஜெர்மானியர்கள் வெறிகொண்டிருப்பவர்கள் போல கொடுமைகள் செய்கிறார்கள் என்று ஒரு போலந்துக்காரன் சொன்னதில் ஆச்சரியமில்லை,

இந்த யூதர்கள் இறந்ததினுல் மட்டும் மனதிற்குக் கிளர்ச்சி உண்டாக்காது என்று நினைக்கிறேன். ஏனென்ருல் ஜெர்மானியர்கள் யூதர்களைக் கொலை செய்வது பழக்கமாகிவிட்டது. இந்தக் கொலைகளைப்பற்றிச் சொல்வதில் ஒரு வலிப்பு வருகிற மாதிரி தோன்றுகிறது. இப்படி ஜெர்மானியர்கள் போலந்துக்காரர்களையும், யூதர்களையும் திரள் திரளாகக் கொலைசெய்வது பித்துப் பிடித்ததினுல் இல்லாமல்போனுலும் அவர்கள் கொண்டிருக்கும் துக்கத்தின் வெறியினுல் தான் இருக்கும். இவ்விதமாக ஜனங்களைச் சுடுவதும், குத்துவதும், கழியினுல் அடித்துக் கொல்வதும் ஒரு கோரமான காக்ஷி. இம்மாதிரி உலகத்தார்களுக்கு அருவருப்பு வரக்கூடிய விதமாக அக்கிரமங்களை ஜெர்மானியர்கள் செய்து வருகிருர்கள்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 11—7—42-லிருந்து 17—7—42-வரை.

**எகிப்து.**—இவ்வாரத்தில் வெள்ளிக்கிழமையன்று எல்அலமீனுக்கு வடக்கே டெல்-எலீஸாவை நோக்கி ஆச்சின்லெக் முன்னேறியதும் சண்டை ஆரம்பமாயிற்று. இது இருப்புப்பாதையை ஒட்டியிருக்கிறது. இங்கே 2,000 கைதிகள் பிடிக்கப்பட்டு 18 டாங்கிகள் அழிக்கப்பட்டன. இது ஒரு சிறு சண்டையென்று சொல்லப்படுகிறது.

அதற்குச் சற்று பிறகு குவொடாரா பள்ளத்தாக்கில் பிரிடிஷ் நிலை ஒன்றை எதிரி பிடித்துக்கொண்டான். ஆனுல் அங்கிருந்து மறுபடி விரட்டப்பட்டான்.

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமைகளில் எதிரி மறுபடியும் டெல் எலிஸாவைப் பிடிக்க முயற்சித்தான். ஆனுல் அது முடியவில்லை. செவ்வாய்க்கிழமை சண்டை நடக்கவில்லை.

தெற்கு முனையில் எதிரி முன்னேறவில்லை.

மத்தியதரைக்கடலில் எதிரிக்கு அதிக சேதத்தை பிரிடிஷ் நீர்மூழ்கிகள் விளைவிக்கின்றன. சனிக்கிழமை மெர்ஸாமட்ரூ தாக்கப்பட்டது. நேசதேச விமானங்கள் எதிரி போர்முனையிலும், எதிரி அணிவகுப்பிலும், மெர்ஸா மட்ரூ, டொப்ரூக், பெங்காஸி முதலியவைகளிலும் தாக்குதல் செய்தன.

மொத்தத்தில் பிரிடிஷ் படைகள் நிலைமையை சமாளித்து வருகின்றன. பிரிடனுக்கும், எகிப்துக்கும் ரகசிய தூதனுன அமீன்ஆஸ்மான்பாஷா ஜுலை 11-ல் செய்தி திருப்திகரமாக இருக்கிறதென்று சொன்னுன்.

**ருஷ்யா.**—ரொஷாக்கை ஜெர்மானியர் பிடித்து, டான் நதியைக் கடந்து, மாஸ்கோ-ரோஸ்டக் ரயில்வேயைத் துண்டித்துவிட்டனர். கார்கவ் முனையில் காண்டிமிரோவ்கா (Kantemirovka), லிஸாசான்ஸ்க் (Lisichansk) பொகுசார், மில்லிரோவோ இவைகளைப் பிடித்தனர். பெலூசிக்கும், பொகுசெருக்கும் இடையில் பெரிய சண்டை நடக்கிறது. இருந்தாலும் வாரனேஷுக்கு அருகில் தான் கடும் சண்டை நடக்கிறது. இதைத் தவிர ஸ்டாலின்கிராடை நோக்கி மூன்று பக்கங்களிலும், டாக்கன்ராக்கிலிருந்து ரோஸ்டவை நோக்கியும் இரண்டு தாக்குதல்கள் செய்யப்படுகின்றன.

காகஸஸைப் பிடிக்க ஹிட்லர் கடும் பிரயத்தனம் செய்துவருகிருன். இரு பக்கங்களிலும் 20 லக்ஷம் சைனியங்கள் உயிருக்காகப் போர் புரிகின்றனர்.

கலினின் முனையில் ஜெர்மன் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டது. மர்மான்ஸ்கிலும், கோலா தீபகற்பத்திலும் ருஷ்ய விமானங்கள் கடுமையாகத் தாக்குகின்றன. சென்ற வாரத்தில் ஆர்க்டிக்கிலும், பால்டிக்கிலும் ருஷ்ய நீர்மூழ்கிகள் 70,000 டன் உள்ள எதிரி கப்பல்களை மூழ்கடித்தன.

ருஷ்யர்கள் தீவிரமாக எதிர்த்து வருகின்றனர். செவ்வாய்க்கிழமை லாஸோ விஸ்கி பத்திரிகை நிருபரிடம் பின்வருமாறு சொன்னான். ருஷ்ய-ஜெர்மன் யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மானியர் முன்னேறினார்கள். அடுத்தபடி 1941-ம் வருஷ டிஸம்பர்மீ முதல் 1942-ம் வருஷ மேமீ வரையுள்ள காலத்தில் ருஷ்யர்கள் முன்னேறினார்கள். இப்பொழுது ஜெர்மானியர்கள் முன்னேறுகிறார்கள். அடுத்த தடவை ஜெர்மானியர் கட்டாயம் தோற்கடிக்கப்படுவார்கள்.

**சைனா.**—நான்செங்கைப் பிடித்ததும், வின்ச்வானை நோக்கி சீனர்கள் முன்னேறுகின்றனர். போயாங்கையும் பிடித்தனர். டெய்கன் மலைகளில் ஜப்பானியர் தடைப்பட்டனர். லிஷூயி, ஸின்கிரான், டெங்ஷூ முதலிய இடங்களிலிருந்தும் எதிரி துரத்தப்பட்டான்.

லிஷூவிலிருந்து தென்மேற்கில் எதிரிகள் முன்னேறி ஸிங்டீன் (Tsingtien)ஐப் பிடித்தனர். ஜூயியனிலிருந்த ஜப்பானியத் துருப்புகள் புடௌதீவை (Futuon)ப் பிடித்து வான்சவ்வை நோக்கி முன்னேறுகின்றனர். ஸிஸிங்ஷான் எதிரி வசமாயிற்று.

சைனாவிலுள்ள அமெரிக்க விமானங்கள் நான்சாங்கைத் தாக்கி 10 எதிரி விமானங்களையும், போக்குவரவையும் அழித்தன. ஜூலை 1-ம் தேதி நேசதேச விமானங்கள் ஹாங்கௌவுக்கருகில் யாங்ஸி நதிக்கரையிலுள்ள ராணுவக் கட்டடங்களையும், ஷிஷூயவ், ஹூவாங்சவ், யேன்பெங் இவைகளையும் தாக்கின. இச் செய்தி தாமதித்து கிடைத்திருக்கிறது. லண்டனிலுள்ள விமர்சகர்களின் அபிப்பிராயப்படி ஜப்பானுக்கு இரண்டு நோக்கங்கள் இருக்கின்றன. கிழக்குச் சைனாவை வசப்படுத்தவும், வடக்கே சைனியங்களை அனுப்பி ருஷ்யாவைத் தாக்குவதும்.

**பர்மா.**—கடந்த வாரத்தில் இந்தியாவிலுள்ள அமெரிக்க விமானங்கள் மியிட்கியானா விமான தளத்தைத்தாக்கி கப்பல்களைப் பழுதுபார்க்கவிடாமல் செய்தன. சின்ட்வின் நதிக்கு மேற்கேயுள்ள கலேமியோவில் 7, 8 தேதிகளில் பிரிடிஷ் பாம்பர்கள் தாக்கின.

**பஸிபிக்.**—அமெரிக்க விமானங்களோடு, அமெரிக்கத் துருப்புகளும் நியூ கினியிலுள்ள மோர்ஸ்பியைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. இரண்டு எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன. நியூ கினியின் வடகிழக்கிலுள்ள பூனா (Buna) என்ற இடத்தில் ஒரு பைடர் விமானமும் அழிக்கப்பட்டது. டிமோர் தீவின் வடமேற்குக்கருகிலுள்ள அலார் தீவிலுள்ள கலபாகி என்ற இடத்திலுள்ள கப்பல் துறைகள் தாக்கப்பட்டன.

**பிரிடிஷ் விமானப்படை.**—வில்ஹெல்ம்ஷேவன், அமாவில்லி, டான்ஸிக், பிளன்ஸ்பர்க், பேஸ்பர்க் இவைகளைத் தாக்கியது. டான்ஸிக் என்பது இங்கிலாந்து கடற்கரையிலிருந்து 800 மைல் தூரத்திலிருக்கின்றது. அங்கே கப்பல் தளமும் விமான தளமும் இருக்கின்றன. தாக்குதல் பகல் நேரத்தில் நடந்தது. பிளன்ஸ்பர்க்கில் கப்பல் கட்டும் தளங்களும், அச்சு சாலைகளும் இருக்கின்றன.

**பலவகைப்பட்டவை.**—(1) இவ்வாரத்தில் ருஷ்யாவுக்கும், நெதர்லாந்துக்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இருநாடுகளுக்கும் அரசியல் சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

(2) குத்தகைக் கடன் மசோதாப்படிக்கு நார்வே வியாபாரக் கப்பல்களைப் பழுதுபார்க்க அமெரிக்கா ஒப்புக்கொண்டிருக்கிறது. இழந்த கப்பல்களைப் பூர்த்திசெய்ய நார்வே அரசாங்கத்திற்கு அமெரிக்கா உதவும்.

(3) குத்தகைக் கடன் மசோதாப்படி அமெரிக்காதான் மற்ற நாடுகளுக்கு உதவவேண்டுமென்பது அல்ல. ரேடியோ லொகேஷன் முறையை பிரிடன், அமெரிக்காவிற்குக் கொடுத்திருக்கிறது.

(4) துருக்கி பிரதம மந்திரி டாக்டர் ராபிக் ஸய்தாம் ஜூலை 7உ இறந்தார். எங்கும் இதைப்பற்றி அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. அவர்

2

அரசியல் அனுபவம் வாய்ந்தவர், தந்திரசாலி. இங்கிலீஷ்காரர்களுக்கு நேயர். இவர் ஸ்தானத்திற்கு ஸரஜோகுலு வந்திருக்கிறார். இதற்கு முந்தி இவர் அயல் நாட்டு மந்திரியாக இருந்தார். நியாயம், பொருளாதாரம், அரசியல் இவைகளில் நிபுணர். தனது அரசியல் அனுபவத்தால் துருக்கி நடுநிலை வகிக்கும்படி செய்துவந்திருக்கிறார். அச்சு நாட்டுத் தந்திரம், பிரசாரம் இவைகளுக்கு துருக்கி உட்படவுமில்லை.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | **சைனா (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமானங்கள் வைக்குமிடங்கள், அவைகள் பறப்பதற்கான உதவும் இடங்கள், தரையிலுள்ள விமானங்கள்.**—ஹான்கோ (Hankow) விமான நிலயத்தில். | | | |
| **2—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **சைனா (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.**—நான்செங் (Nanchang). | | | 3 விமானங்கள். |
| **4—7—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **சைனா (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம்.**—காண்டன் (Canton). | | நஷ்டமில்லை. | 6 விமானங்கள். |
| **6—7—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான மிறங்குமிடம்.**—எல்டாபா (El Daba) பிரதேசத்தில். | | | |
| | **விரோதிக்குச் செல்லும் ஸப்ளைகள்.**—மெர்ஸா மாட்ரூ (Mersa-Matruh) விலிருந்து, டொப்ரூக் (Tobruk) வரையிலும். | | | |
| | **துறைமுகம், கப்பல்கள்.**—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள்.**—போர்முனை முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**6—7—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

**விரோதி துருப்புகளின் கூட்டம்.**—காலிமியோ (Kalemyo) வட பர்மா (Burma)வில்.

**சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

**விமான தளம்.**—காண்டன் (Canton).

**நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

லே (Lae), ஸலாமுவா (Salamaua).

**7—7—42.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

**விரோதித் துருப்புகள் கூட்டம், யுத்த தளவாட துவியல்களும்.**—முன்னணிகளுக்குப் பின்னுல்.

**ராணுவ லக்ஷியங்கள்.**—பெங்காஸி (Benghazi).

**இரண்டு விரோதிப் படகுகள்.**—ஸிடி பரானிக் (Sidi Barrani) கருகாமையில்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

**விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.**—கிழக்குப்போர் முனை எங்கும்.

**தூரக்கிழக்கு–பர்மா (Burma)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

**ரயில்வே ஸ்டேஷன்கள்.**—ஹுபின் (Hupin), பின்பா (Pinbau), டாங்கி (Taungni), நாம்டி (Namti).

**விமான நிலயம்.**—மிட்கினு (Myitkyina).

**8—7—42.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

**இரவில்.**—ஜெர்மனிக் (Germany)துச் சொந்தமான கப்பற்படை தளம், நீர்மூழ்கிகள் கட்டும் இடம்—வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmhshaven)

**விரோதி விமான நிலயங்கள், மற்ற ராணுவ லக்ஷியங்கள்.**—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France).

**ரயில்வே ஸ்டேஷன்.**—அபிவில்லி (Abbeville).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—7—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விரோதி டாங்கிகள் மோட்டார் லாரிகளின் கூட்டம்.**-முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள்.**-யுத்தப் பிரதேச முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **சைனிய வாசஸ்தலங்கள், கட்டடங்கள்.**-கலிமியோ (Kalemyo), பாலேட்வா (Paletwa) கலடான் (Kaladan) நதிக்கரையில். | நஷ்டமில்லை. | | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விரோதிச் சைனிய வாசஸ்தலங்கள்.**—ஸலாமுவா (Salamaua). | | | |
| **9—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **இரவில்.—சுரங்கவேடிகள் போடுவது**—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | 2 விமானங்கள். | |
| | **வேவு பார்த்தல்**—வடகடல் (North Sea) பூராவிலும். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விரோதிக் கூட்டங்கள்.**—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்திற்கருகாமையிலுள்ள முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| | **விரோதி போக்குவரத்து சாதனம்.**—எல் டாபா (El Daba)வுக்கு அருகாமையில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.**-போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **சிண்ட்வின் (Chindwin) நதியில் வேவு** பார்த்தல். | | | |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள் (Nanchang)** நான்செங். | | | **10 விமானங்கள்.** |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **10—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—எல் டாபா (El Daba). | | | 2 விமானங்கள். |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| | அச்சு நாட்டின் போக்குவரத்து.—யுத்த ரங்கத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச்சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான தளம், நான்செங் (Nanchang). | | | |
| | ஜப்பானிய ராணுவத் தலைமை ஸ்தானம்—லின்ச்வான் (Linchwan). | | | |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானப்போர்.—பூனு (Buna). | | | 2 விமானங்கள். |
| **11—7—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | நீர்மூழ்கிகள் கட்டும் இடங்கள்.—டான்ஸிக் (Danzig) பிளன்ஸ்பர்க் (Flensburg) பால்டிக் கரையில். | மிகவும் பலத்த சேதம். | 3 விமானங்கள். | |
| | இரவில்.—சுரங்க வேடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கவசம் பூண்ட வண்டிகள், டாங்கிகள்.—எல் அலமீனு (El Alamein)க்கருகாமையில், முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | கப்பல் துறைகள்.—மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh). | | | |
| | விரோதியின் சிறு கப்பல்கள்.—டொப்ரூக்கி (Tobruk) லிருந்து மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh) வரை. | | 3 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—தென்மேற்கு பஸிபிக்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—7—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விமான நிலயம்—அபிவில்லி (Abbeville). | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பெரிய விரோதி துருப்புக்கூட்டம்.—போரரங்கத்திற்கருகாமையில். | | | |
| | துறைமுகம், மற்ற ராணுவ லக்ஷியங்கள்.—டொப்ருக் (Tobruk). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | அச்சு நாடுகளின் சப்ளை போக்குவரத்து டொப்ருக் (Tobruk)கிலிருந்து மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh) வரையிலும். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமானநிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | துருப்புகள்—வட பர்மாவி (Burma)லுள்ள கலிவா (Kalewa) பிரதேசத்தில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—7—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசம் வடகிழக்கு இங்கிலாந்து (England)-ம் தெற்கு வேல்ஸ் (Wales) கடற்கரையும். | | 4 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 9 விமானங்கள். | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டெல்டா பிரதேசம்.-ஸூயஸு (Suez)க்கு அருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **8—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 பைடர், 3 பாம்பர் விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **9—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 9 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ஹார்ன் தீவு (Horn Island). | | | |
| | **விமான நிலயம்**—தீவில். | | | |
| **10—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.— ஒரு இடம்— இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரையில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**–(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி துறைமுகம் (Moresby). | | 2 விமானங்கள். | |
| **11—7—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம் இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில். | | | 1 விமானம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்) | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **பாலஸ்தீனம் (Palestine)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ஹெய்வா (Haifa). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | 3 விமானங்கள் பழுதுபட்டன. | 4 விமானங்கள். | 2 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதிகள் விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**12—7—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

சாயந்திரம் ஒரு இடம்—தென்மேற்குக் கடற்கரை.

ஆகாயச் சண்டை.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel). 1 விமானம்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்).

அலெக்ஸாண்டிரியா (Alexandria) பிரதேசம். சேதமில்லை.

**13—7—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ருஷ்ய நிலைமை.** இவ்வாரத்தில் காகஸஸைக் குறித்து செய்யப்படும் ஜெர்மன் முன்னேற்றம் பயங்கரமாகக் காணப்பட்டாலும், ருஷ்யச் சைனியங்களுக்கு ரயில்வே போக்குவரவு ஏற்படக்கூடிய வாரனேஷ் என்ற இடம் ஆபத்துக்குள்ளானதாக இருந்தாலும் பொதுவான தோற்றம் அவ்வளவு அதைரியத்தை உண்டுபண்ணக்கூடியதாக இல்லை. இது சம்பந்தமாக 10 விஷயங்களைக் கவனிப்பது நலம்:-(1) இரண்டு மாதங்களுக்கு முன்செய்யப்பட்ட ஜெர்மன் முனைேற்றம் கெர்ச்சிலும், ஸெபாஸ்டபூலிலும் பலவாரங்கள் தடைபட்டது. (2) ரோஷாக்கை 24-மணி நேரத்திற்குள் பிடித்துவிடலாமென்று ஜெர்மானியர் நினைத்தது முடியாமல் ஒருவாரம் பிடித்தது. (3) சென்ற வருஷமே அழிக்கப்பட்டதாகச் சொன்ன ருஷ்யச் சைனியம் புதுப்பிக்கப்பட்டு, சீர்பட்டு, ஒவ்வொரு அங்குல பிரதேசத்திற்கும் வெகுபாடுபட்டு சண்டை செய்கிறது. (4) ஜுலை 7வ பிடிபட்டதாக ஜெர்மானியர் சொல்லியும் வாரனேஷ் இன்னும் எதிர்த்து நிற்கிறது. (5) தற்காலம் செய்யப்படும் ஜெர்மன் தாக்குதல்கள் குறுகிய போர்முனைகளில் செய்யப்படுகின்றன. (6) இவ்விதத் தாக்குதல்களைச் செய்து மாரிகாலத்தில் ருஷ்யர்களால் பிடிக்கப்பட்ட ஸ்தலங்களைத் திரும்பப் பிடிக்கப் பார்க்கின்றனர். (7) வாரனேஷைத் தவிர மாஸ்கோவிற்கு தெற்கேயிருந்து மற்றொரு மார்க்கம் இருக்கிறது. (8) ஜப்பானை ருஷ்யாவின் பின்புறம் தாக்கும்படி தூண்டுவதிலிருந்தே பிரகிருதத்தில் நாஸிகளின் நிலைமை அவ்வளவு பிரமாதமாக இல்லையென்று தெரிகிறது. ஆனால் தனக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்களை

முன்னிட்டு ஜப்பான் அவ்விதம் செய்யத் துணியவில்லை. (9) ஹிட்லர் மீண்டும் முன்னேறுவதாக வைத்துக்கொண்டாலும் மறுபடி மாரிகாலம் வந்துவிடும். காகஸஸின் மாரிகாலம் மாஸ்கோ, லெனின்கிராட் பிரதேசங்களைக் காட்டிலும் கொடுமையாக இருக்கும். பள்ளத்தாக்குகளைவிட மலைகளில்தான் குளிர் ஜாஸ்தி. (10) ஐரோப்பாவில் இரண்டாவது யுத்த முன்னணி ஏற்படுமென்ற பயம்.

வி வி வி வி வி வி வி

**எகிப்து.** எகிப்து சண்டை ஜயித்தபாடுமில்லை தோற்ற பாடுமில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். எதிரியின் வேகம் தணிக்கப்பட்டுள்ளது. எதிரியும் முன்னேற்றப் போர் செய்ய முடியவில்லை. முயற்சி 'தடைபட்டதாகவே' அச்சு நாடுகளும் ஒப்புக்கொள்ளுகின்றன. 9 நாட்களாக விடாமுயற்சி செய்தும் ரோமல் எல் அலமீனில் தானிருக்கிறான். முன்னேற முடியவில்லை. ஆனால் வெகுதூரம் முன்னேறியதால் ரோமல் களைப்பாறுவதாக அச்சு நாட்டுப் பிரசாரகர்கள் சொல்லி வருகின்றனர். உண்மையில் ரோமல் சும்மாயில்லை. அலைமேல் அலையாக வந்து எல் அலமீனை எதிரி தாக்கினான். ஆனால் அதே வேகத்துடன் பின்வாங்கும்படி செய்யப்பட்டான். 600 கைதிகளும், 44 பீரங்கிகளும், 20 டாங்கிகளும் பிடிபட்டன. தாத்காலிகமாகப் பிடித்திருந்த முனையிலிருந்து விரட்டவும்பட்டான். எல் டாபா வரையில் போர்முனை நீண்டிருக்கிறது. வடக்கு முனையிலும் விரட்டப்பட்டுள்ளான். பிரிடிஷ் விமானப்படை கடுமையாகவே தாக்கி வருகிறது. எல் டாபா, மெர்ஸாமெட்ரு, டொப்ருக், பெங்காஸி முதலியனவைகளும் தாக்கப்பட்டன. நேசநாடுகளுக்கு எண்ணிக்கை அதிகம் ஏற்பட்டிருக்கிறது. லுப்ட்வாபி படையையும் மீறிவிட்டது.

ஸப்ளைகள் எகிப்திற்குச் செல்லவில்லை என்ற அச்சு நாட்டுக் கூற்று பொய்யானது. மிஸ்டர் சர்ச்சில் சமீபத்தில் சொன்னபோது 9,50,000 மனிதர்களும், 1,09,000 யந்திரவண்டிகளும், 50,000 யந்திரங்களும், 6,000 விமானங்களும், 5,000 பீரங்கிகளும், 4,500 டாங்கிகளும் பிரிடன், அமெரிக்கா, சாம்ராஜ்யம் முதலிய இடங்களிலிருந்து எகிப்திற்கு சென்றிருக்கின்றன என்றார்.

எகிப்திற்கு ஸ்வதந்திரம் கொடுப்பதாகவும், எகிப்து எகிப்தினருக்குத்தான் என்றும் அச்சு நாட்டினர் கூறுவது வீண் பிரசாரம்தான். எகிப்தில் நிலைமை அமைதியாக இருக்கிறது. பிரிடிஷார் கொடுக்கும் உதவியில் நம்பிக்கை இருக்கிறது. சமீபத்தில் அச்சுநாட்டு நடவடிக்கைகளுக்கு முஸ்லீம்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையைப்பற்றி துருக்கி பத்திரிக்கை கூறுவதாவது:– 'அச்சுநாடுகளின் மொழிகளை எகிப்தும் மத்தியக்கிழக்கு நாடுகளும் நம்பமாட்டா'.

வி வி வி வி வி வி வி

**டோஜோ அதைரியப்படுகிறான்.** ஜூலை 7உ டோஜோ ஒலிபரப்பும்போது பின் காணப்பட்டிருக்கும் விதமாக அவன் தனது கவலையைத் தெரிவித்திருக்கிறான். 'தற்சமயத்தில் நாம் மனம் தளர்ந்தால் ஐந்து வருஷங்களாக சைனாவில் செய்யப்பட்ட நமது முயற்சி வீணாகும்.' இவ்விதம் அவன் கவலைப்படுவதற்கான காரணங்கள் இருக்கின்றன. ஜப்பானுக்கும் தோல்விகள் ஏற்பட்டுவருகின்றன.

1. **யூனனில்** ஸால்வீன் நதிக்கரையில் ஜப்பானிய முயற்சி தடைபட்டது. மே மாதம் முதல் இந்நதியைக் கடக்க அவர்களால் முடியவில்லை. இந்தோ-சைனாவிலிருந்து செய்யப்பட்ட முன்னேற்றமும் ஜூன் 20உ முதல் 50 மைல்களுக்குமேல் செல்ல முடியவில்லை. ஜப்பானிய வெளிநாட்டுப் படை சீனப் படைக்கும் பிரிடிஷ் படைக்கும், இடையில் அகப்பட்டுக்கொண்டது. பிரிடிஷ் படை இந்திய எல்லையிலிருக்கிறது. ரெங்கூனுக்குச் செல்லும் ஜப்பானியக் கப்பல்கள் மலாகா ஜலசந்தியில் தாக்கப்படுகின்றன.

**கிழக்கு சைனாவில்** கான்டன்-செகியாங் இருப்புப்பாதையைப் பிடிப்பதற்கு ஜப்பானியரால் முடியவில்லை. கான்டனுக்கு வெளிப்பக்கங்களில் சீனர்கள்

புகுந்திருப்பதாகவும் தெரிகிறது. செகியாங்—கியாங்ஸி இருப்புப் பாதையிலுள்ள 50 மைல் இடைவெளியை ஜூன் 19வ முதல் பிடித்த பாடில்லே. தற்சமயம் அது 70 மைலுக்கு நீண்டிருக்கிறது.

சீனத்துருப்புகளைத் தோற்கடிக்காமல் இருப்புப்பாதைகளையும் ரஸ்தாக்களையும் ஜப்பானியர் பிடிக்க முயலுவதால் கொரில்லாச் சண்டை செய்வதற்கு சீனர்களுக்குச் சௌகரியமாக இருக்கிறது.

சீன விமான தளங்கள் ஏராளமாக இருப்பதால் அவைகளெல்லாவற்றையும் பிடிப்பதற்கு ஜப்பானியரால் முடியாது.

அச்சுநாட்டுத் தேவைகளுக்கு இணங்கவேண்டியிருப்பதால் சைனுவிலுள்ள ஜப்பானியப்படைகள் ஸைபீரிய எல்லேக்குள் சேமிக்கப்பட்டுள்ளன. சீனச் சண்டையும் கொஞ்சம் நிறுத்தப்பட்டுள்ளது.

அலூஷியனில் சில தீவுகளை ஜப்பானியர் பிடித்தது ஒரு முன்னேற்றமாகாது. வடக்கேயிருந்து அமெரிக்க—ருஷ்யத் தாக்குதல் நேராமல் செய்யவே இம் முயற்சி ஜப்பானுல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் சிங்கப்பூருக்கு ஒரு இருப்புப் பாதையைப் போடுவதாகச் சொல்லப்படும் பிரசாரம் சந்தேகத்திற்கு இடமானதுதான். இதுவரைப்பிடித்துள்ள நாடுகளுக்குள் தரை மார்க்கத்தை விருத்தி செய்யும் நோக்கம் ஜப்பானுக்கு இருக்கலாம். ஏனென்ருல் மிட்வே, பவளத்தீவு, சண்டைகளுக்குப் பிறகு கடல் போக்குவரவு சாவதானமில்லாதது என்றே நினைத்திருக்கலாம். ஷாங்காய்க்கும் கான்டனுக்கும் இடையிலுள்ள 800 மைல் இடைவழியையும் சேர்த்து, கொரியா, மஞ்சூரியா, சைனு, இந்தோ-சைனு, ஸயாம், மலேயா இவைகளை ஒன்று சேர்க்கும் நோக்கமிருக்கலாம். இந்த திட்டம் முடிவடைந்தால் உலகிலேயே நீண்ட இருப்புப்பாதை ஏற்படும். அதன் நீளம் சுமார் 4,000 மைல் ஆகும். புதிதாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு ஒரு தடையாக ஆகும். ஆனல் இது வீண் கற்பனைதான். ஏனென்ருல் அதற்குத் தகுந்த எஃகும் இதர பொருளும் ஜப்பான் வசத்தில் கிடையாது. ரயில்வே இஞ்ஜின்களும், மற்ற சாமான்களும் கிடையாது. சீன கொரில்லாப் படைகள் அதைப் பூர்த்தியடைய விடமாட்டா. நேசநாடுகளும் அது பூர்த்தியாகும்வரை கையைக் கட்டிக்கொண்டு பார்த்திருக்கமாட்டா.

வி வி வி வி வி வி வி

**கப்பல்களின் நிலைமை.** லண்டனில் இரண்டு நாள் நடந்த காமன்ஸ் சபையின் ரகசியச் சர்ச்சையில் பிரகிருதமுள்ள கப்பல் நிலைமையையும் சென்ற யுத்தத்தினபோது இருந்த நிலையையும் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. இந்த யுத்த ஆரம்பத்தில் 1914-ஐ விட பிரிடனிடம் குறைவான கப்பல்கள் தானிருந்தன. எதிரி ஐரோப்பாவின் மேற்கு பாகத்தைப் பிடித்துக்கொண்டதால் உணவுப்பொருள்களும், இதர சாமான்களும் வெகுதூரத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. இதைத்தவிர பல யுத்தரங்கங்களுக்கு யந்திர சமான்களை அனுப்ப வேண்டியுமிருக்கிறது. இந்து மஹாசமுத்திரம், மத்திய தரைக் கடல், பஸிபிக் முதலியவை சென்ற யுத்தத்தில் நேசநாடுகளின் வசத்திலிருந்தன. இப்போது அங்கே எதிரி பயம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் கப்பல்கள் கடல் மட்டத்திலிருந்தும், நீர்மூழ்கிகளாலும் தாக்கப்பட்டன. தற்போது விமானங்களிலிருந்தும் தாக்கப்படுகின்றன. அமெரிக்கக் கப்பற்படை முதலில் தூரதேசச் சண்டைகளுக்குக்கென்று தயார் செய்யப்பட்டிருந்தது. தற்சமயத்தில்தான் கடற்கரைப் பாதுகாப்பிற்காவும் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதோடு ஜெர்மனியில் நீர்மூழ்கிகள் துரிதமாகவே கட்டப்படுகின்றன. நேசதேசங்களிலோ கப்பல் நஷ்டத்திற்குத் தகுந்த விதமாகப் புதிய கப்பல்கள் கட்டப்படவில்லே. ஆகவே நேசதேசங்களுக்குக் கப்பல்களின் நிலைமை கவனிக்கத்தக்கது தான். ஜனவரி 14ம்-தேதியிலிருந்து அட்லாண்டிக்கில் 350 அமெரிக்கக் கப்பல்கள் அமுக்கப்பட்டன. அதிகம் காரிபிரியன் கடலில் தான். கப்பல்களை வேண்டுமானல் புதிதாகக் கட்டிவிடலாம். மாலுமிகளை எவ்வாறு அந்த அனுபவத்துடன் அமைக்க முடியும்?

இவ்வளவு இருந்தாலும், இந்த சிரமம் சமாளிக்கப்பட்டு வருகிறது. ஜூலை 2உ மிஸ்ட்டர் சர்ச்சில் காமன்ஸ் சபைமுன் அறிவித்தபோது, ரூஸ்வெல்ட்டுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக முதலில் கப்பல் சேதத்தைக் குறைப்பதும், அதிகக் கப்பல்கள் கட்டுவதும் முக்கியமாகக் கவனிக்கப்படும் என்றார்.

மே மாதத்தில் அமெரிக்கக் கப்பல் தளங்களில் 6,32,000 டன் நிறையுள்ள 58 புதிய கப்பல்களும், ஜூன் மாதத்தில் 66 எண்ணெய் கப்பல்களும், சாமான் படகுகளும் கட்டப்பட்டன. இந்த திட்டத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போட்டுள்ள திட்டம் அதாவது 1942-ல் 80,00,000 டன் கப்பல்கள் கட்டிமுடிக்கப்படும். ஒரு வருஷத்திற்கு முன்பு அமெரிக்காவில் மாதம் 2,00,000 டன் தான் கட்டப்பட்டது. தற்போது 7,00,000 டன் வீதம் ஆகிறது.

கடலில் ஆபத்தைக் குறைப்பதற்கான கப்பற்படையும் விஸ்தாரப்படுத்தப்படுகிறது. காரிபியன் கடல், மெக்ஸிகோ குடா, அட்லாண்டாக், முதலிய இடங்களில் அடைந்த அனுபவங்களைப் பார்த்தால் நாசகாரிகளும் துணைக்கப்பல்களும் தேவையென்று தெரிகிறது. இதற்காக 85,000 லக்ஷம் டாலர் மொத்தச் செலவில் 47 சத விகிதம் செலவு செய்து 9,00,000 டன் யுத்தக் கப்பல்கள் கட்டுவதென அமெரிக்க சபை தீர்மானித்திருக்கிறது. பாக்கியுள்ள 53 சத வீதம் விமானமேற்றும் கப்பல்களும், க்ரூயிஸர்களும் கட்டப்படும். இவைகளின் நிறை 5,00,000 டன் ஆகும். 1,00,00,000 சதுர மைலுள்ள பஸிபிக்கில் வெகு தூரம் செல்லும் க்ரூயிஸர்களும், விமான மேற்றிய கப்பல்களும் அதிகத்தேவை. இவைகளைத் தவிர 45,000 டன் எடையுள்ள 12 புதிய சண்டைக் கப்பல்களும் அமெரிக்காவில் கட்டப்படுகின்றன. பேர்ல் துறைமுக அனுபவத்தைப் பார்த்தால் பெரிய கப்பல்களுக்குத்தான் தேவையிருக்கிறது. அதிலும் விமானமேற்றிய கப்பல்களுக்குத்தான். இன்னும் 2 வருஷத்தில் 12 கப்பல்கள் மிதக்கவிடப்படும்.

வி வி வி வி வி வி வி

**லாடிஸி.** செக்கோஸ்லாவியாவில் லாடிஸி என்ற கிராமத்தை நாஸிகள் கொலையாளியான ஹீட்ரிச் கொல்லப்பட்ட காரணத்தை முன்னிட்டு, அடியோடு அழித்துவிட்டனர். இங்கு இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக அமெரிக்காவில் இல்லினாய்ஸில் (Illinois) ஜோலியட் என்ற கிராமத்திற்கு லாடிஸி என்று புதுப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்புதுப்பெயர் வழங்கப்பட்ட தினத்தன்று 50,000 பேர்கள் கூடியிருந்தனர். வென்டல் வில்கி அன்று அக்கிராசனம் வகித்தார். பண்டைக் காலத்தில் தேசாந்திரத்திற்குச் சென்று குடியேறிய பாதிரிமார்கள் (Pilgrim Fathers) சொந்த ஊர் பெயர்களையே புதிதாகக் குடியேறிய நாடுகளுக்கும் வைத்தார்கள். அந்த வழக்கத்தை ஞாபகப்படுத்தி தற்போதும் லாடிஸி என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினர்.

இப்புதுப்பெயர் கொடுக்கப்பட்ட தினத்தன்று ஒரு ஞாபக ஸ்தம்பம் ஒன்று நடப்பட்டது. அதில் 'அரக்கனால் அழிக்கப்பட்டபோதிலும், ஸ்வதந்திரத்தை விரும்பும் ஒவ்வொருவரின் மனதிலும் இருக்கும் (செக்கோஸ்லாவியா) லாடிஸி கிராம வாசிகளின் ஞாபகார்த்தமாக (இல்லினாய்ஸ்) லாடிஸி வாசிகளால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது' என்றும் எழுதப்பட்டிருந்தது. அதேதினத்தில் 'ஸ்வதந்திர தீபம்' என்ற பெயருடன் தூண்டாமணி விளக்கு ஒன்று ஏற்றப்பட்டது. இதனால் ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவிற்குமுள்ள நெருங்கிய ஒற்றுமை தெரிகிறது.

அந்த சமயத்தில் வென்டல் வில்கி ஒரு சபதம் செய்துகொண்டார்.

"பொஹீமியாவில் உள்ள அச்சிறு கிராம வாசிகளின் ஞாபகத்தை எந்நாளும் நாம் வைத்துக்கொள்ளுவோம். அந்த கிராமத்திற்குப் பதிலாக இல்லினாய்ஸில் ஒரு கிராமம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. யுத்தம் முடியும்வரை நமக்கு இந்த தீவிர உணர்ச்சி குறையாமல் இருக்கவேண்டும். உலகிலிருந்து வெறிகொண்ட அரக்கர்கள் அழியவேண்டும்."

அந்த சந்தர்ப்பத்தில் ஜனதிபதி ரூஸ்வெல்ட் அனுப்பிய செய்தி பின்வருமாறு:—

"பல ஏரிகளும், மிஸிஸிபி நதியும் இருக்குமிடத்தில் இருக்கும் புதிய லாடிஸி கிராமம் அமெரிக்காவின் ஞாபகத்தில் எப்போதும் இருக்கும். நாஸிகளால் மனித ஸ்வதந்திரத்தைக் கெடுக்கமுடியாது".

வி வி வி வி வி வி வி

**பிரான்ஸ் இன்னும் இருக்கிறது.** ஸ்வதந்திர உணர்ச்சியுடனும், சண்டை செய்யும் ஊக்கத்துடனும் இருக்கிறது. இதைப் பற்றி டிகால் ஸ்வதந்திரம் கிடைக்கும் நாளை துரிதமாகவே கவனித்து தன்னல் முடிந்தவரை முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னர். 'சண்டை செய்யும் பிரான்ஸ்' என்று மிஸ்டர் சர்ச்சில் பிர்ஹாகிமில் சண்டை செய்த பிரெஞ்சுப் படையைப் பற்றி சொன்னர். அதையே டிகால் தனது இயக்கத்தின் பெயராகக் கொண்டிருக்கிருர். இனிமேல் அப்பெயருடன் அது வழங்கப்படும்.

பாஸ்டைல் (Bastille) தினத்தைக் கொண்டாடுவதற்குத் தனது மக்களுக்கு அறிவித்துவிட்டு திங்கட்கிழமை டிகால் ரேடியோவில் ஒலிபரப்பியதாவது:—

'பிரான்ஸ் இன்னும் ஜீவனுடன் கூடியிருக்கிறது. கஷ்டங்கள் அதைக் குலைக்க வில்லை, ரகசியமாக பலம் பெற்று வருகிறது. ஜெர்மானியர் பின்வாங்கி, நேச நாடுகள் பிரான்ஸில் புகுந்து எதிரிகளை ஒழித்ததும் பூராநாடும் எதிரியைச் சிக்ஷிக்க முயலும்.'

வி வி வி வி வி வி வி

**மதத்தைக் கெடுப்பது.** எட்டாவது நூற்ருண்டைச் சார்ந்த ஜப்பானிய புத்த சன்னியாசியின் சிலையை நான்கிங்கில் ஜப்பானியர் திறந்துவைத்தனர். தாய்லாந்திலும், பர்மாவிலும் புத்த மதத்தின் 'ஹீனயானக்' கொள்கைகளைத்தான் தழுவுவது. ஜப்பான் இதைத் தள்ளுபடி செய்துவிட்டது. சென்ற வருஷம் மே மாதத்தில்தான் ஹீனயான வகுப்பின் வேஷக் (Vesak) கொண்டாட்டத்தை ஜப்பான் கொண்டாடியது. இக் கொண்டாட்டம் ஸிலோன், பிரெஞ்சு இந்தோ-சைன, பர்மா, தாய்லாந்து முதலிய இடங்களில் சகஜம். தற்சமயம் இது ஸர்வதேச புத்தமதச் சங்கத்தினிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. சைன, தாய்லாந்து, பிரெஞ்சு இந்தோ-சைன முதலிய இடங்களில் புத்தமதப் பிரசாரம் ஜப்பானிய அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டு ஜப்பானிய புத்தமதச் சங்கத்தினிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. படிப்பு இலாகா, யுத்த இலாகா, அயல் நாட்டு இலாகா மந்திரிகளுக்கு புத்த சன்னியாசிகளின் செய்கைகளைக் கண்டிக்கும் அதிகாரம் இருக்கிறது. 1939-ல் அமுலுக்கு வந்த மதக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி படிப்பு இலாகா மந்திரிக்குத்தான் மேல் பார்க்கும் அதிகாரம். சீன-ஜப்பானிய புத்தமதச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு ஹிங்சல், அமாய், நான்கிங் இங்கிருக்கும் சைனியத்தின் ஒரு பகுதிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே புத்தமதப் பிரசாரம் என்பது அரசியல் பிரசாரமாகிவிட்டது.

இதோடுமட்டுமில்லை. இஸ்லாம் மதத்தைக் காப்பதாகவும் ஜப்பான் சொல்லி வருகிறது. கிழக்கு மெக்காவாக டோகியோவைச் செய்யவும் நினைத்திருக்கிறது. மத்திய சைன, தெற்குக் கடல்கள் இங்கெல்லாம் முகம்மதிய மதத்தைப் பிரசாரம் செய்கிறது. 1938-ன் ஆரம்பத்தில் பெகிங் நகரில் அகில சைன முகம்மதிய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சைன, மஞ்சுகோ, ஜப்பான் முதலிய நாடுகளை ஒன்று சேர்ப்பதுதான் அதன் நோக்கம். அதுவும் ஜப்பானிய சைனியத்தின் முயற்சிதான்.

இஸ்லாம் மதத்திற்கும் ஜப்பானுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. அரசியல் நோக்கங்களுக்காக மதத்தை உபயோகித்துவருகிறது. ஜப்பானுக்குச் சாதகமாக ஐந்தாம்படையினரை உண்டுபண்ணுவதுதான் கருத்து.

**துற்நடத்தைகளின் ஆட்சி.** ஜெர்மனியில் இப்பொழுதுள்ள நிலைமையைப் போல் அத்தேச சரித்திரத்தில் இதுவரையிருந்ததில்லை. ஹிட்லர் ஆக்ஷியில் அவனுடைய சிநேகிதர்கள், போதகர்கள், அவன் கீழுள்ளவர்கள் யாவரும் நேர்மையான முறைப்படி நடக்காதவர்கள் தான். இந்த யுத்த சமயத்தைத் தவிர மற்ற வேறெந்த சந்தர்ப்பத்திலும் அவர்கள் ஜன சமூகத்திலிருந்தே விலக்கப்படுவார்கள்.

இதற்கு சில உதாரணங்கள் இங்கு குறிப்பிடுவோம் :—ஜெர்மன் அரசாங்கத்தில் ஹாம்பர்க்கில் இப்பொழுதுள்ள முக்கிய உத்தியோகஸ்தரான காப்மான் (Kaufmann) என்பவன் இதற்கு முன் திருடனாயிருந்தவன். நார்வேயின் முக்கிய உத்தியோகஸ்தரான டேர்போவன் என்பவன் ஒரு பெரும் காமி. அவன் ஒரு சமயம் பள்ளியில் படிக்கும் ஒரு பெண்ணை தன்னுடைய சிநேகிதனின் மகள் என்றும் பாராமல் மானபங்கம் செய்தான். பவேரியாவின் உள்நாட்டு மந்திரியான அடால்ப் வாக்னர் (Adolf Wagner) எனபவன் ஒரு பெரிய குடிகாரன். சென்ற யுத்தத்தில் அவன் தலையில் ஒரு சிறு குண்டு தைத்தது. அது இன்னும் எடுக்கப்படவில்லை. ஹீட்ரிச் லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவன். கோயரிங் சதாகாலமும் மருந்து சாப்பிட்டுக்கொண்டே இருப்பான். ருமேனியாவிலுள்ள ஜெர்மன் மந்திரி, கில்லிங்கர் ஏராளமாகக் கொலை செய்யத் தூண்டியோ, அல்லது நடத்தியோ வந்ததில் முதல்தரமானவன். ரோயம் ஹீனஸ், இன்னும் அவனைப்போல் அநேக உத்தியோகஸ்தர்கள் யாவரும் காம விகாரம் பூண்டவர்கள். போலந்து கவர்னர் பிரான்க் (Frank)கும், டாக்டர் வேண்டலநம் ஏற்கனவே வக்கீல்களாக இருந்தவர்கள். அவர்கள் அத்தொழிலில் அயோக்யத்தனமாக நடந்து கொண்டதால் வக்கீல்கள் சங்கத்திலேயே இவர்கள் இகழப்பட்டார்கள். பிரான்க் (Frank)குக்கு அவன் தகப்பனார் வேலைபண்ணி வைத்தான். அவன் இதற்குமுன் வக்கீல் தொழிலில்அவனிடம் ஒப்புவித்த பணங்களைத்திருடிய குற்றத்திற்காக அத்தொழிலிலிருந்துநீக்கப்பட்டவன். இப்பொழுது போலந்தில் உயர்ந்த உத்தியோகஸ்தரான ஆல்வேன்ஸ்லிபேன் இதற்குமுன் மூனிச்சில் பொய் நாணயங்களைக் கையாளுபவன் என்ற கெட்ட பெயர் அவனுக்கு உண்டு. அவனுடைய முன்னோர்கள் பிரஷ்ய சைனியத்தில் சேர்ந்தவர்கள். வீல்ஹெம்கியூப் பிராண்டன்பர்க்கிற்கு தலைவனாக இருந்தான். ஸர்க்கார் பணத்தை கொள்ளையடித்த குற்றத்திற்காக அவன் தன்னுடைய வேலையை ராஜீனாமா கொடுக்க நேர்ந்தது. ஆஸ்லண்டிலுள்ள பெரிய உத்தியோகஸ்தரான ஹீன்ரிச்லோஸ் ஒரு பெரிய குற்றம் செய்தவன். நாஸி ஜெர்மனியின் வாழ்த்தை பாடிய ஹார்ஸ்ட் வேஸல் (Horst Wessel) என்பவன் இதற்குமுன் ஹீனமான தொழிலை நடத்தியவன்.

---

# இந்திய ஆகாய விமானப் படைக்கு கிளாஸ்டர் கோமகனின் பாராட்டு.

---

## அதற்கு கௌரவச் சின்னங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

இந்திய ஆகாய விமான சட்டப் பிரகாரம் இந்திய ஆகாய விமான ஸ்தாபனம் முதன்முதலாக 1933-ம்ளு ஏப்ரல்மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் இந்தியா இந்தியப் படைப்பகுதிகளின் பொறுப்பேயாகும். இந்திய விமானப் படை தயாராகி 10 வருஷங்களே யாகினும், அதிகப் பிரக்யாதியடைந்துவிட்டது. பிரிடிஷ் விமானப் படையின் ஆதரவின்கீழ் ஆரம்பத்தில் ஒரு படைப் பகுதியாயிருந்து இப்பொழுது ஏராளமான படைப் பகுதிகள் தயாராகிவிட்டன. 1937-ம்ளுத்தில் வாஸிரிஸ்டான் என்ற இடத்தில்தான் முதன் முதலில் நடவடிக்கைகளில் கலந்து கொண்டது. இப்பொழுது நடக்கும்

யுத்தத்தில் இந்தியாவைச் சுற்றிலுமுள்ள கடற்கரைகளையும், வடமேற்கு எல்லைப் புறப் பிரதேசங்களையும் அது பாதுகாத்துவருவதுமன்றி பர்மாவில் நடந்த போரில் அரும் பெரும் சேவை புரிந்தது.

சென்ற ஜுலைமீ 12வ ஞாயிற்றுக்கிழமை யன்று கிளாஸ்டர் கோமகன் இவ் விமானப் படையைப் பார்வையிட்ட பொழுது, அப்பகுதிக்கு மிகவும் கௌரவம் வாய்ந்த சின்னங்களைப் பரிசாக அளித்துவிட்டு அடியில் கண்டவிதமாக புகழ்ந்து பேசினார் :—

"இந்திய விமானப் படையின் கௌரவச் சின்னங்களை வழங்குவதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் குறித்து நான் சந்தோஷமடைகிறேன். உங்களுடைய ஆகாய விமானப் படையின் சரித்திரம் சுருக்கமானதுதான். ஆனால் வடமேற்கு எல்லைப்புறத்திலும், பர்மாவிலும் உங்களுடைய நடவடிக்கைகள் மற்ற நேசதேச ஆகாய விமானப் படையின் நடவடிக்கைகள் போல் மகத்தானவையாக இருக்கிறது. நமது கப்பல் போக்குவரத்துக்குத் துணையாகவும், எதிரிப் படைகளையும், எதிரியின் நீர்மூழ்கிக் கப்பல்களையும் வேவு பார்த்து வரும் சேவைகளிலும் உங்கள் சமுத்திரக்கரைப் பாதுகாப்புப் படை அரும் பெரும் வேலை செய்திருக்கிறது.

"இப்பொழுது உங்கள் படைப் பகுதிகள் விஸ்தரிக்கப்படும் நிலைமையிலும், மறுபடியும் புதிய விமானங்களுடன் பூர்ண முஸ்தீப்பும் பெரும் நிலைமையிலும் இருக்கின்றன. உங்களோடு மற்ற நேசதேச விமானப் படை பகுதிகளும் சேர்க் கப்படப்போவதும் நானறிவேன். இந்தியத் தரைப்படை எப்படி அதன் நீண்ட கால தேசசரித்திரத்தில் அடிக்கடி புகழ் பெற்றிருக்கிறதோ அதைப்போல் நீங்களும் கௌரவமாகவும் பெருந்தன்மையாகவும் நடந்துகொள்வீர்கள். இந்த கௌரவச் சின்னங்களை உங்களிடம் கொடுத்து, அவைகளை வைத்துக்கொள்ளும்படி செய்வதில் இந்திய விமானப்படைபலத்தின் உணர்ச்சிக்கும், எனது சகோதரரான, மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியும், இந்தியாவும் உங்களிடத்தில் வைத்திருக் கும் நம்பிக்கைக்கும் தகுந்தவாறு நீங்கள் நடப்பீர்கள் என்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது."

---

# ஸ்வதந்திரத்தில் கூட்டுறவு.

---

## இந்தியா, பிரிடிஷ் சாம்ராஜ்யம் இவைகளைப்பற்றி Mr. அமெரி.

---

இந்தியாவை அரசாளும் விஷயத்தில் பிரிடன் பொதுவாகக் கொண்டுள்ள லக்ஷியங்களுக்காக முயற்சிக்கவில்லை என்று ஒரு குறைகூறப்படுகிறது. இதை பிரிடிஷ் மக்களும் பலர் நம்பியிருக்கின்றனர். அடுத்தபடியாக ஐரோப்பாவில் ஸ்வதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்காக நாம் சண்டை செய்தும் அவ்விரண்டையும் இந்தியாவுக்கு அளிக்க மறுப்பதாயும் சொல்லப்படு கிறது. மேலும் ஜெர்மனி ஜப்பான் இவைகளின் ஆக்கிரமணத்தை அடக்க நாம் முயற்சியெடுத்துக்கொண்டும், இந்தியாவிலுள்ள நமது ஆளுகையை எடுக்க மறுப்பதாயும் சொல்லப்படுகிறது. இவையாவும் பிரிடன் பேரில் சாட்டப்படும் ஒரு குற்றமாகும்.

அடுத்தபடியாக மற்றொரு குறை சொல்லப்படுகிறது. இந்தியாவுக்கு தற்சமயத்தில் பூரண ஸ்வதந்திரத்தைக் கொடுக்க நாம் விரும்புவதாகச் சொல்வோம். அப்படிச் சொன்னால் கொஞ்ச காலத்திற்கு முன்னே ஸ்வதந்திரம் கொடுக்கவேண்டியிருந்தும் அப் பிசகை இப்பொழுதுதான் நாம் உணர்ந்திருப்ப தாகவும், அல்லது இந்தியாவை அரசாளுவதற்கோ, பாதுகாப்பு செய்வதற்கோ, முடியாமலிருப்பதால் நாம் இந்தியாவுக்கு ஸ்வதந்திரம் கொடுக்க சித்தமாய்

இருப்பதாயும், அல்லது இந்தியாவை அணுகியிருக்கும் ஆபத்தை முன்னிட்டு அதற்கு ஸ்வதந்திரத்தைக் கொடுத்துவிடலாம் என்று நாம் நினைப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவையாவும் நமது கௌரவத்திற்கு ஹானி விளைவிக்கும் அபிப்பிராயங்களேயாகும்.

இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் ஸ்வதந்திரத்தைக் கொடுக்காத போதிலும், ஸ்வதந்திரத்தை அடைவதற்கான சந்தர்ப்பத்தை அளிக்காமலிருந்தாலும், அராஜரீக முறை இல்லாதபடி செய்யப்பட்டிருக்கிறது.

### சட்ட முறை.

இந்தியா எக்கண்டத்திலும் சமாதானம், அமைதி ஏற்படும்படியாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்வதந்திரத்திற்கு இவை அடிப்படையான அம்சங்களாகும்.

இதைக் காட்டிலும் ஸ்வதந்திரத்தை பெறவேண்டுமென்ற உணர்ச்சி இந்தியாவில் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. நாம் அவ்வித ஸ்வதந்திரத்தை சந்தோஷத்துடனேயே கொடுப்போம். அப்படிச் செய்வதில் ஸ்வதந்திரத்திற்கு அடிப்படையான அம்சங்களைக் கெடுக்காமலும், அமைதி கெடாமலும் இருப்பதற்குத் தகுந்தபடி ஒரு அரசாங்க முறை கொடுக்கப்படும். அதைக் கொண்டு தேசீய வாழ்க்கையை நன்கு அமைத்துக்கொள்ளலாம். இது எப்பொழுது சாத்தியமென்பதுதான் பிரச்னை. திடீரென்று கொடுத்துவிடுவது கூடாது, அதற்குத் தகுந்தபடி அரசாங்க நைபுண்யமும், நல்லெண்ணமும் ஏற்பட்டவுடன் இவ்விதம் ஸ்தாபிக்கப்படும்.

### அஸ்திவாரம் ஏற்கனவேயே போடப்பட்டது.

ஒரு தலைமுறையாகவே நாம் நம்மாலானதைச் செய்துவருகிறோம். இனி இந்தியர்கள்தான் முன் வரவேண்டும்.

அஸ்திவாரத்தை நாம் போட்டுவிட்டோம். அவர்களுக்குத் தகுந்தபடி திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்தியர்களுடையது.

இந்த முறைகளை அமைக்கும்பொழுது நாம் நமது இயற்கை குணங்களான அமைதி, சட்டதிட்டத்திற்கு அடங்கியிருப்பது, ஸ்வதந்திரத்தில் நம்பிக்கை, வாஸ்தவமான சம்பவங்களின் அனுபவம் இவைகளுக்குத் தகுந்தபடி நாம் நடந்து கொண்டிருக்கிறோம். இந்தியாவுக்கு நாம் இதுவரை செய்திருக்கும் நன்மையைப் பற்றியும், இனி செய்யப் போவதாயிருப்பதைப் பற்றியும், இந்தியாவின் உதவியைக்கொண்டு இந்த யுத்தத்தில் வெற்றிபெற்று அதன் மூலம் இந்தியாவுக்கு ஸ்வதந்திரத்தைக் கொடுத்து அதன் நட்பை அடையும் விஷயத்திலும் நமக்கு அதிக கௌரவம் ஏற்படுகிறது. எப்படியிருந்தாலும் நாம் ஏற்கனவே ஸ்வதந்திரம் கொடுக்காமல் தவறுதல் செய்துவிட்டதாகவும், யுத்தத்தில் தோற்றுவிடுவோம் என்றும் நாம் குறைகூறிக்கொள்ள வேண்டாம். ஆனால் பிரகிருதமுள்ள இந்தியர்களின் முன்னேற்றமும், ஸ்வதந்திர மக்கள் நிரம்பிய பிரிடிஷ் சாம்ராஜ்யமும் ஒன்றுசேர்ந்து ஸ்வதந்திரத்தை எங்கும் ஸ்தாபிப்பதற்கான முறையில் நடந்துகொள்ளுவோம். இருநாடுகளுக்கும் அதிக ஒற்றுமை ஸ்தாபிக்கப்படும்.

---

## சிலோன் ஜாக்கிரதையாகவே இருக்கிறது.
## தாக்கப்பட்டால், அது மால்டா தீவைப்போலவே சமாளித்து நிற்கும்.

(இல்லஸ்ட்ரேடட் வீக்லீ ஆப் இந்தியா பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

ஏற்கனவே சிலோன் சுறுசுறுப்பில்லாமல் தூங்கி விழுந்துகொண்டிருந்தது. பிரயாணக் கப்பல்கள் வந்தால் நிலக்கரி எடுத்துப்போவதற்குமட்டும் அவைகள் அங்கு தங்கும். மேலும் அங்கு தேயிலை, ரப்பர் வியாபாரம் மிகவும் மழமழப்பாக நடந்துவரும். ஆனால் ஜப்பானியர்கள் அதைக் கைப்பற்ற நோக்கம்

கொண்டதினல் உலகச் செய்திகளில் சிலோனின் பெயர் திடீரென்று வெளி வந்தது. இப்பொழுது நேசதேசத்தார்களின் கிழக்குப்பக்கம் தாக்குதலுக்கு இதைத் தளமாக வைத்துக்கொள்ள வேண்டுமாதலால் அது மர்ம ஸ்தானமாகக் கருதப்படுகிறது. 'அதன் பொருளாதார முக்கியத்வமும் திடீரென்று தெரிந்து கொள்ளப்பட்டது. தினசரி பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் அதன் பெயர் வருவதிலிருந்தே அதன் முக்கியத்வம் தெரியவரும். அங்கு பழைய பழக்க வழக்கங்களெல்லாம் மாறிவிட்டது. தற்போது ஒரு புதிய உணர்ச்சி சிலோனில் ததும்புகிறது. முந்திய வருஷங்களிலிருந்த ஓய்வும், வேலையின்மையும் போய் விட்டது.

முழுபலத்துடன் ஜப்பான் படையெடுத்தால் சிலோன் எவ்விதம் சமாளிக்க முடியும்? இரண்டு வருஷத்திற்கு முன்னல் சமாளிப்பதற்கு ஒருவித சந்தர்ப்ப முமில்லை. ஒரு வருஷத்திற்கு முன்னல், அப்பொழுதும் ஒன்றுமில்லை. ஆனல் இப்பொழுது எல்லா சந்தர்ப்பங்களுமிருக்கின்றன. வெள்ளக்கணக்காக மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ராணுவ முஸ்தீப்பே இல்லாதிருந்த நிலைமையில் திடீர் என்று பூராவும் தற்காப்புள்ள நாடாக ஆய்விட்டது.

விமான எதிர்ப்பு பீரங்கிகள் அங்கு வைக்கப்பட்டிருப்பது அடிக்கடி ஞாபகம் மூட்டப்படுகிறது. அநேக நாட்களில் காலை நேரங்களில் விமான எதிர்ப்பு பீரங்கிகள் வெடிப்பதைக் கேட்கலாம். இந்தப் பயிற்சிகளில் ஏற்படும் சப்தம்கூட பயங்கரமானது. கனமான பீரங்கிகளும், லேசான பீரங்கிகளும், சாதாரண யந்திரத் துப்பாக்கிகளும், சிறு துப்பாக்கிகளும் எல்லாம் சேர்ந்து இடி போன்ற சப்தத்தை உண்டாக்குகின்றன.

## பாம்பர்களும், பைடர்களும்.

பாம்பர் படைப்பகுதிகளும், பைடர் படைப்பகுதிகளும் அங்கு இருக் கின்றன. ராணுவ வீரர்களை ஏற்றிச் செல்லும் லாரிகள் ரஸ்தாவில் போய்க் கொண்டிருக்கின்றன. அவை எங்கேயிருந்து வருகின்றன, எப்படிப் போகின்றன என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனல் இங்கு விமானங்கள் இருக்கின்றன. லாரிகளும் உண்டு. இவற்றை உபயோகப்படுத்த பொறுக்கியெடுத்த மனிதர் களும் இருக்கிருர்கள். இவ்விஷயங்கள் தெரிந்தவருக்கு ஒருவித மனோ வேதனையுமில்லை.

இவ்வித மாறுதலை ஆரம்பித்தவர் இன்ஸ்கிப் என்பவர். ஆரம்பகாலத்தில் அவருக்கு ஆதாரமாக அவரிடம் ஆங்காங்குள்ள சுதாவாகச் சேர்ந்த படைவீரர் கள் கூட்டமும், பிரிடிஷ் வீரர்கள் கூட்டமும்தான் இருந்தன. ஆனல் இந்தியா விலுள்ள ரிஸர்வ் படைகளே அவர்களுக்கு அனுகூலமாகயிருந்தன. ஏற்கனவே நிலையாகவுள்ள தற்காப்பு இடங்கள் நவீன முறையில் அபிவிருத்தியடைந்தன. ஸப்ளை, போக்குவரத்து பிரச்னைகளைக் குறித்து விசேஷ கவனம் செலுத்தப் பட்டது. ரஸ்தாக்கள் வழியாக முதன்முதலாக அனுப்பப்பட்ட டிரக்குகள், லாரிகள் யாவும் வந்துசேர்ந்தன.

ஆகாய விமான தற்காப்புகளும் கவனிக்கப்படாமல் இல்லை. இதுவரையில் பிரிடிஷ் விமானப்படை சிலோனை எப்பொழுதாவது வந்து தங்கிப்போகக்கூடிய தளமாகக் கருதி வந்தது. ஆனல் இவையெல்லாம் சீக்கிரம் மாறிவிட்டது. முதன்முதலாக பைடர்களும், பாம்பர்களும் வரும்படி நேரிட்டது. விமான நிலயங்கள், விமானமிறங்குமிடங்கள், அவசரத்திற்கு இறங்கவேண்டிய இடங்கள் இவைகள் யாவும் வெகுதுரிதமாகக் கட்டப்பட்டன. தொழிலாளி களின் கூட்டங்கள் அல்லும் பகலும் வேலை செய்தன.

மலேயாவிலும், ஜாவாவிலும், பர்மாவிலும் யுத்தம் நடந்ததால் கஷ்டகாலம் வர நேரிட்டது. மூன்றுவித படைகளின் ஒத்துழைப்பினல் ஏற்படக்கூடிய பயன்க ளைச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. விமானப்படை, தரைப்படை, கப்பற்படை இம் மூன்றுக்கும் கட்டளையிடக்கூடிய மேலான தலைவர் ஒருவர் அவசியமென்பது அப்பொழுதுதான் தோன்றிற்று. ஸர் ஜாவ்ரே லெயிட்டன் என்பவரைத் தலை வராக நியமிக்கப்பட்டது எதிர்பார்த்ததுதான். சிலோன் வாசிகளுக்கு அவரைத்

தெரியாது. ஆனால் இன்ஸ்கிப்பின் புகழத்தக்க வேலையினால் அவர் வந்திருப்பது எல்லோருக்கும் தெரியவந்தது.

அதிகார தோரணைகளுக்கு இடங்கொடுக்காமல் கப்பற்படை, தரைப்படை, ஆகாயப்படை இவைகளை விஸ்தரிக்கச்செய்ய அவர் உணர்ச்சி காட்டியதால் அந்தப் புதிய தலைவர்பேரில் யாவருக்கும் அதிக நம்பிக்கை ஏற்பட்டது. சாமான்கள் வந்துகுவிய ஆரம்பித்தன. முந்தின கோட்டையைக் காக்க இருந்த படைகளுடன் கனடியர்களும், இந்தியர்களும், ஆபிரிக்கர்களும்கூட வந்துசேர்ந்தார்கள். எல்லா விஷயங்களும் அதிவேகத்துடன் செய்யப்பட்டன. இடவசதிகளும், போக்குவரத்து சாதனங்களும் தேடப்பட்டன. இதற்குமுன் இங்கிலாந்தைத் தவிர கோட்டைபோல் இருக்கும் தீவு வேறு ஒன்று கிடையாதென்று எண்ணினார்கள். இப்பொழுது தூங்கிக்கொண்டிருந்த சிலோன் தீவு ஒரு பெரிய கோட்டையாக மாறி விட்டது. அங்கு யுத்த வீரர்களும், யந்திர சாதனப்படையும் குழுமியிருக்கிறார்கள்.

### சோதனை நேரம் வந்தால்?

சோதனை? ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல்மீ 5-ம் தேதி கொழும்பில் ஜப்பானிய விமானத் தாக்குதல்கள் ஏற்பட்டது. 25 எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன. வியாழக்கிழமை ஏப்ரல்மீ 9உ திரிகோணமலையில் ஜப்பானிய விமானத்தாக்குதல். 21 எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன.

சிலோனுக்கு இயற்கையாகத் தற்காப்பு சாதனங்கள் இல்லை. சமுத்திரக் கரையோரத்தில் குன்றுகள் கிடையாது. எதிரிகளை வஞ்சிக்கக்கூடிய சதுப்பு நிலங்கள் இல்லை. சாதாரண சமயங்களில் சமுத்திரைக்கரையில் எந்த இடத்திலும் கப்பல்கள் வந்திறங்கலாம். ஆனால் சாதாரண சமயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுதோ எதிரி கோஷ்டி எங்கே வந்தாலும் அதற்குத் தக்க கடூரமான தாக்குதல் ஏற்படும்.

ஜப்பானியர்கள் தணிந்து கீழ்த்திசைக் கப்பற்படையையும், கிழக்கிந்தியத் தீவு கப்பற்படையையும் எதிர்த்து, ஏதாவது நாட்டுப்புறத்தில் வந்திறங்குவார்கள் என்று விவகாரத்திற்காக நாம் நினைத்தாலும், முக்கியமான பட்டணங்களை அவர்கள் ஆக்கிரமிப்பதினால் ஏராளமாகவும், கடுமையாகவுமுள்ள கஷ்டங்களுக்கு ஜப்பானியர்கள் உள்ளாகாமலிருக்க முடியாது.

பர்மாவிலும், மலேயாவிலும் போலில்லாமல் இங்கு ஐந்தாம் படையினர்களும், அவரவர்களுக்குத் துணைகாட்டிகளும், மொழிபெயர்ப்பவர்களும் கிடைக்க மாட்டார்கள். சிலோன் நாட்டுவாசிகள் நிற்சந்தேகமான தேசபக்தியுள்ளவர்கள். ஆகையால் ஜப்பானியர்களுக்கு வழிகாட்டிகள் கிடைக்கமாட்டார்கள். நாடு விவரம் தெரியாமல் தத்தளிக்கும் எதிரிகள் அந்த நாட்டை நன்றாகத் தெரிந்திருக்கக்கூடிய யந்திர சாதனப்படை வீரர்களுக்கு சுலபமாக இரையாவார்கள்.

படைகளுக்கு ஆள்சேர்க்கும் சாலைகளில் தினசரி கூட்டம் அதிகம். சிங்களவர்கள், தமிழர்கள், (Burghers) பர்க்கியர்கள், மலேயாக்காரர்கள் எல்லோரும் இந்தப் பொதுவான சண்டைக்காகத் தானாகவே வந்து போர்செய்கிறார்கள். சில இடங்களில் குடும்பங்கள் பூராவுமே யுத்தத்தில் சேர்ந்திருக்கின்றன. சிலோனுக்குக் கட்டாயமாக ஆள்சேர்ப்பதில்லை. மிக்கத் திறமை வாய்ந்த விமான பாதுகாப்பு ஸ்தாபனம், பொதுமக்கள் தற்காப்பு முறையை போதுமான அளவு பார்த்துவருகிறது. இன்னும் ஒன்றும் தேவையில்லை. விமானங்கள் தயார், பீரங்கிகள் தயார், மனிதர்களும் தயார்.

இந்த விஷயங்களைப் பார்ப்பதில் உண்டாகும் தோற்றங்களை விட்டுவிட்டு விஷயத்தை மட்டும் ஆராய்ந்து பாருங்கள். ஆங்காங்குள்ள துண்டு துணுக்குகளெல்லாம் நிலை நிற்க ஆரம்பித்துவிட்டன. அந்தத் தீவிலுள்ளவர்கள் ஒற்றுமையாகவும், தடையன்னியும், வெற்றிகரமாகவும் போர் செய்யத் தயாராக இருக்கிறார்கள். சிலோனைவிடாமல் உயிருள்ளவரை பாதுகாக்கவேண்டியது அவசியம். ஆமாம். கடைசி வரையில் அவர்கள் அதைவிடாமல் போர் செய்வார்கள்.

# ஹிட்லரின் முடிவான முயற்சி.

(விகாம்ஸ்டீட் எழுதியது).

இப்போது நடக்கும் யுத்தத்தையும் கடந்த மகா யுத்தத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து பல ஜோஸியங்கள் சொல்லப்பட்டன. அவையாவும் தப்பானதாகவே காணப்படும். உபமானமாகச் சொல்லுவதைக் காட்டிலும் ஒரேவிதமான சம்பவங்கள் நடக்கிறதாகவே சொல்லலாம். அதாவது வட ஆபிரிக்காவிலும், ருஷ்யாவிலும் தற்சமயம் செய்யப்பட்ட ஜெர்மன் தாக்குதலும் 1918-ம் வருஷம் மார்ச்சுமீ முடிவில் லுடன்டார்ப் செய்த பெரிய தாக்குதலும் ஒரு மாதிரிதான். ஏனென்றால் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஜெர்மானியர் முடிவாக ஒரு முயற்சிசெய்து பார்த்துவிட வேண்டுமென்று நினைத்தனர்.

பிரான்ஸிலுள்ள பிரிடிஷ் அணிவகுப்பினுள் லுடன்டார்ப் புகுந்து பாரிஸுக்கு 60 மைல் அருகிலும் வந்தான்.

1918-ம்வருஷ ஜூலைக்குள் பாக் (Foch) வெற்றிகரமாகக் குறுக்கு எதிர்ப்பைச் செய்ய முடியவில்லை. இதற்கு ஆறு வாரங்கள் கிரமித்து லுடன்டார்ப்பும் ஹின்டன்பர்க்கும் சமாதானத்தைக் கோரினார்கள்.

ஆனால் சென்ற யுத்தத்தைப்போல் இந்த யுத்தத்தில் சம்பவங்கள் துரிதமாக நடைபெறா. இருந்தாலும், ஒரே பக்கமாகவும் அதே காரணத்தை முன்னிட்டும் நடக்கும். அந்த யுத்தத்தில் ஐரோப்பாவில் அமெரிக்கர்களின் பலம் விருத்தியடைந்ததால் தான் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. இந்த யுத்தத்திலும் ஜெர்மனியின் ஆசைகளை அழித்து அமெரிக்கா இன்னும் அதிகமாகவே பலம் அடைந்திருக்கிறது. வெற்றியும் ஹிட்லரின் கைக்கு எட்டாதபடி செய்யப்பட்டிருக்கிறது. ருஷ்யாவிலும், ஆபிரிக்காவிலும் நமக்குக் கிடைக்கும் தோல்விகளால் எதிரியின் முடிவான தோல்வி கொஞ்சம் தாமதப்படுகிறது. அவ்வளவுதான். மற்றபடி சிறு தோல்விகளால் பாதகமில்லை.

ஹிட்லருக்குத் தற்சமயத்தில் எல்லாம் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. இரண்டாவது ருஷ்ய மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு இன்னும் மூன்று மாதங்கள் தான் இருக்கின்றன. மத்தியக்கிழக்கு, காகஸஸ் இவைகளை நோக்கி செய்யப்பட்டிருக்கும் பின்ஸர் படையெடுப்பு பலிக்கவேண்டுமானால் தற்சமயத்திலும் இனிமேலும், அவன் வெகுபாடுபடவேண்டும்.

அவனுக்கு ஆட்களின் தேவை மிக அதிகமாக இருக்கிறது. பிரெஞ்சு வேலைக்காரர்களை ஜெர்மன் தொழிற்சாலைகளில் நியமித்து அங்கிருக்கும் ஜெர்மானியரை அழைத்துச்செல்ல நினைத்திருக்கிறார்கள். ஸெபாஸ்டபூல், கார்கவ், லிபியா, எகிப்து முதலிய இடங்களில், அடைந்த மனித நஷ்டத்தை ஈடுசெய்வதற்கான சாதகம் ஏற்படவில்லை.

மீதமுள்ள தனது படைகளெல்லாவற்றையும் கிழக்கே சேமிக்கவும் இனி முடியாமல் போகும். மேற்கேயோ பலமான தாக்குதல்கள் நம்மால் செய்யப்படும்.

---

# ஐரோப்பாவிலுள்ள ரகசியப் பத்திரிகைகள்.

---

நாஸிகளின் கொடுங்கோல் ஏற்பட்டு இரண்டு வருஷங்களானாலும் ஆங்காங்கு இருப்பவர்களின் ரகசிய எதிர்ப்புகள் அடக்கப்படவில்லை. வரவர அதிகமாகிக்கொண்டே போகிறது.

ஐரோப்பாவிலிருந்து ரகசியமாக வரும் பத்திரிகைகளிலிருந்தும் இவ்விஷயம் புலப்படுகிறது. அப்படி வரும் பத்திரிகைகள் யாவும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் நன்றாக எழுதப்பட்டி

இருக்கின்றன. சிறிய பையன்கள் மூலமாக இப்பத்திரிகைகள், ஜெர்மன் ரகசியப் போலீஸார் வசம் அகப்படாமல் கொண்டுவரப்படுகின்றன. ரகசியமாகத் தபால் பெட்டிகளில் போடப்பட்டு வெளிநாடுகளுக்கு வந்து சேருகின்றன.

பிரான்ஸ்.

பிரான்ஸில் ரகசியப் பத்திரிகைகள் திட்டமாகவே பிரசுரிக்கப்படுகின்றன. பாண்டாக்ருயல் (Pantagruel) என்பது ஒன்று. "இது விலைக்காக ஏற்பட்டதல்ல. காசு கொடுத்து இதை ஒருவரும் வாங்கக்கூடாது" என்று அதன்மேல் எழுதப்பட்டிருக்கும். பிரிடிஷாருக்குச் சாதகமான விஷயங்கள்தான் அச்சிடப்படும். ஜெர்மானியர் படையெடுத்ததால் நேர்ந்த பயன்களைச் சரியான விவரங்களைக் கொடுத்து நிரூபிக்கிறது.

மனதைக் கவரும் தலையங்கங்களும் அச்சிடப்படுகின்றன. "ஹிட்லரின் 1941 வஸந்த காலத் தாக்குதல் பெல்கிரேடை நோக்கி செய்யப்பட்டிருக்கிறது. பெல்கிரேட் என்பது ஐரோப்பாவிலல்லவா இருக்கிறது! இங்கிலாந்தின் தலைநகரமல்ல! ஹிட்லரின் புதிய திட்டத்திற்கு மீண்டும் தடை! பெல்கிரேட்டிற்கும், ஏதென்ஸுக்கும் ஜெர்மானியர் போவது நலம். லண்டனுக்குப் போகக்கூடாது!" என்றெல்லாம் அப்பத்திரிகையில் காணப்படும். பெர்லினில் பாதுகாப்பு ஸ்தலத்தில் அமைக்கப்பட்டுள்ள படுக்கை வசதிகளைப்பற்றி பெர்லின் பத்திரிகையில் காணப்பட்ட தகவலைப்பற்றி "ஜெர்மானியர் சுரங்க அறைக்குள் ஏன் இருக்கவேண்டியிருக்கிறதோ நமக்குத் தெரியவில்லை!" என்றும் பரிகாசமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதியிலும் "விழித்துக்கொள்ளுங்கள்! ஸ்வதந்திரம் நீடூழி வாழ்க, ஸ்வதந்திர பிரான்ஸ் நீடூழி வாழ்க!" என்று காணப்படும். வால்மி என்ற மற்றொரு பத்திரிகை அச்சிடும் வசதி இல்லாததால், டைப் அடிக்கப் (Sten cilled) பட்டிருக்கிறது. "நமது நாட்டில் படையெடுத்த எதிரி இன்னும் இருக்கிறான்" என்று எடுத்துச் சொல்லும். எதிரியுடன் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைச் சில வெண்பாக்களில் எடுத்துக் காண்பிக்கும். எதிரியையும், துரோகி பிரெஞ்சுக்காரர்களையும் வெறுக்கும். "பி. பி. ஸி. ஒலிபரப்பை நீங்கள் தினம் கேட்க வேண்டும். ஜெர்மானியருக்குச் சாதகமான பாரிஸ் ரேடியோவைக் கேட்கக்கூடாது. டிகாலுடன் சேர்ந்து கொண்டு எதிரிகளுடன் சண்டை செய்யவேண்டும். விஷியாட்களையும், அவர்களுடைய அவமானகரமான சட்டங்களையும் மதிக்கக்கூடாது. லவால், டீட் போனறவர்களைத் தண்டித்து, அவர்கள் அழிந்தபிறகுதான் நமக்கு சௌக்கியம் ஏற்படும்" என்று ஒரு சஞ்சிகையில் இருந்தது. வால்மியின் மற்றொரு சஞ்சிகையில் "இங்கிலாந்து முதலிய நாடுகளெல்லாம் கொடுங்கோலை ஒழித்து, புதிய உலகத்தையே நிர்மாணம் செய்வதெனத் தீர்மானித்திருக்கின்றன" என்றும் இருந்தது.

லா வாக் டி பாரிஸ் என்ற கம்யூனிஸ்டு கக்ஷியைச் சேர்ந்த பத்திரிகை 1941-ம் வருஷ ஜனவரிமீ முதற்கொண்டு ருஷ்யாவுடன் ஒத்துழைக்கும்படி யாவரையும் கேட்டுக்கொண்டது. "1917 முதல் ருஷ்யா வெற்றியடைந்திருக்கிறது. ருஷ்யாவில்தான் உண்மையான ஜனநாயகம் ஏற்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டம், கவலை முதலியன ஒழிக்கப்பட்டுள்ளன" என்று காணப்பட்டது. ஜீன் ஜாரிஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஹுமனைட் என்ற பத்திரிகை ஹிட்லரைப்பற்றியும் அவனுடைய சகாக்களைப்பற்றியும் கோரமான படங்களை எழுதிப் பிரசித்தப் படுத்துகிறது. பிரான்ஸ் படையெடுக்கப்பட்ட தினத்தன்றே இப்பத்திரிகைக்குப் பிரசுரத் தடை ஏற்பட்டது. "பிரான்ஸின் மக்கள்" என்று தன்னைச் சொல்லிக்கொண்டு மற்றொரு பத்திரிகை பொதுவான அரசாங்கம் தேவையென்று பகிரங்கமாக அச்சிடப்பட்டே பரவுகிறது. லவால், டோராயிட், டிலாரோகே போன்றவர்களின் ஆட்சியை நிந்திக்கிறது. இது பிரெஞ்சு கம்யூனிஸ்டு கக்ஷியின் மத்திய கமிட்டியின் சார்பாக மாரிஸ் தோரெஸ், ஜாக்ஸ்டுலோஸ் என்பவர்களால் பிரசுரிக்கப்படுகிறது. இப்பத்திரிகைகள் யாவும் பிரெஞ்சு மக்களின் மனப்பான்மையை நன்றாகத் தெரிவிக்கின்றன. ரகசியப் போலீஸார் அடக்கமுடியவில்லை. ஆக்கிரமண நாடுகளை எதிர்த்தே இவைகளின் பிரசாரம் நடந்து வருகிறது.

### பெல்ஜியம்.

1914—1918-ல் கியாதி வாய்ந்த வாலிபர் பெல்ஜிக் என்ற பத்திரிகை மறுபடி கிளம்பியிருக்கிறது. அப்போதும் பெல்ஜியத்தைப் படையெடுத்தவர்களைக் கண்டித்து விஷயங்களை எழுதிய மாதிரி தற்போதும் நாஸிகளுக்கு விரோதமாகவே எழுதி வருகிறது. இதன் பத்திரிகை ஆசிரியர் பீடர்பான் ஜார்டின்டி எச்மாண்டு, பிரஸ்ஸல்ஸ் என்று தனது விலாசத்தைச் சொல்லிக்கொள்ளுகிறான். நாஸிகளின் மேற்பார்வையின் அடையாளம் சில சஞ்சிகைகளில் காணப்படுகிறது. வெளிநாடுகளில் நடக்கும் பல விஷயங்கள் வியாக்கியானத்துடனேயே காணப்படுகின்றன. ஜெர்மனியில் பிரிடிஷ் விமானங்கள் உண்டாக்கிய சேதத்தின் விவரங்கள் படங்களின் மூலமாக நன்றாகக் காண்பிக்கப்படுகின்றன. மியூனிச் பாதிரியார், கார்டினல் பால்ஹபர், வான் காலன், வும் முதலியோரின் மொழிகள் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்படுகின்றன. பெல்ஜிய துரோகிகளின் செய்கைகள் கண்டிக்கப்படுகின்றன. சமீபத்தில் வெளிவந்த ஒரு சஞ்சிகையில் பிரிடிஷ் வீரர்களின் புதைகுழிகளின் படங்கள் போடப்பட்டு, பின வருமாறு எழுதப்பட்டிருந்தது. "இவர்களின் செயல்கள் மறக்கப்படவில்லை. இவர்களுக்கு அலங்காரம் முதலியன நன்றாகச் செய்யப்பட்டன. ஜூன் மீ 21உ இவர்களின் புதைகுழியின்பேரில் மூன்று வர்ணமுள்ள விகொடி பிடிக்கப்பட்டு மரியாதையும் செய்யப்பட்டது".

லே பெல்ஜி என்பது மற்றொரு ரகசியப் பத்திரிகை. இது மாதம் ஒரு முறை வெளிவரும் "Ad Augusta per Augusta" என்ற பழமொழியை பிரதானமாகக்கொண்டு, தேசாபிமானச் சங்கத்தாரால் பிரசுரிக்கப்படுகிறது. "பிரிடனுக்குச் சாதகமாக இதுவரை நிலைமையில்லாதபோயினும், முடிவான வெற்றி கிடைப்பது மாத்திரம் நிச்சயம். சரித்திர அனுபவத்தைப் பார்த்தால் அயோக்கியர்களுக்குத்தான் காலம்போல் காணப்படும். ஆனால், நேசநாடுகள் யோக்கியமான தன்மையைக் கொண்டும், சைனிய உதவியைக் கொண்டும் வெற்றியடைவார்கள்" என்று ஒரு தலையங்கத்தில் இருந்தது.

### நெதர்லாந்து.

இங்கே மூன்று பத்திரிகைகள் வெளிவருகின்றன. எட்டு வருஷச் சண்டை முதல் கியாதிவாய்ந்த டிகெஸ் என்பது ஒன்று. லெய்டன் ஸர்வகலாசாலை மாணவர்களால் நடத்தப்படுகிறது. விரிஜி நெதர்லாந்து, உட்டிவோஸ்டிஜின் எனபவை மற்றவை. அச்சிடப்பட்டும், டைப் அடிக்கப்பட்டும், கையினால் எழுதப்பட்டும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. லண்டன் ஒலிபரப்பு விஷயங்களும். எதிரிகளை எதிர்ப்பதற்கான புதிய வழிகளும் குறிக்கப்பட்டிருந்தன. ஜெர்மன் பாதிரிகளின் ஆயர்கவிசனும் நாஸிகளை பல இடங்களில் எதிர்க்கும் வழிகளும் இருந்தன.

### செக்கோஸ்லாவியா.

ஜோஸப் ஸ்கால்டா என்பவர் மூன்று திருட்டுப்பத்திரிகைகளைப் பிரசுரப்படுத்தினார். அவனை நாஸிகள் பிடித்து ஜெர்மனிக்குக் கொண்டுவந்து தூக்கிலிட்டனர். இப்படிச் செய்து ரகசியப் பிரசாரத்தை அடக்கலாமென்று நாஸிகள் நினைத்தனர். அதற்கு மாறாக பல பத்திரிகைகள் கிளம்பின. (மீண்டும் சண்டை செய்யுங்கள்) விபாஜ என்ற பத்திரிகையும் 'தேசீய விடுதலையை முன்னிட்டு வெளிவரும் செய்தி' என்ற பத்திரிகையும் முக்கியமானவை. திருட்டுத்தனமாகத்தான் இவைகள் வெளிநாடுகளுக்குப் போகின்றன.

### நார்வே.

(எங்களுடைய நாடு எங்களுக்கு வேண்டும்) வி வில் ஆஸ் என்ற பத்திரிகையை, காங்ஸ் போஸ்டன், வி-போஸ்டன், டைடன்ஸ் டென், ஸ்வதந்திர வியாபார இயக்கம் முதலிய பெயருடன் வெளிவரும் பத்திரிகைகளும் முக்கியமானவை. டைடன்ஸ் டென் என்பது ஆஸ்லோவில் முன்பு வெளிவந்த பத்திரிகைகளில் ஒன்றாகும். நாஸிகளுக்கு உட்படாததால் அச்சமயம் நின்றுவிட்டது. பிறர் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டுமென்றே பலவிதப் பெயர்களுடன் பிரசுரிக்கப்படுகின்றன. இப்பத்திரிகைகளை அச்சிட்டு அனுப்பும் விஷயத்தில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஒத்தாசை செய்கின்றனர். இவர்களை ரகசியப் போலீஸார் கண்டுபிடிக்க முடிவதில்லை. ருஷ்யப் போர்முனைக்கு நார்வேகாரர்களை

சேர்க்க முடியாததற்கு நார்வேப் பத்திரிகைகள்தான் காரணம். நாஸிகளை எதிர்த்து நார்வே பாதிரிமார்கள் போராடியதற்கும், பிஷப் பெர் கிரேவ் ராஜீனுமா செய்ததற்கும் நார்வே பத்திரிகைகள்தான் காரணம்.

**டென்மார்க்.**

டென்மார்க்கில் ரகசியப் பத்திரிகைகள் அதிகம் இல்லை. துண்டுக்கடுதாசிகளும் கையினால் எழுதப்பட்டவைகளும்தான் அதிகம். நாஸிகள் கூடும் கூட்டங்களில் கலகம் செய்யும்படி இவைகள் தூண்டும். இதன் பயனாக தேசாபிமானக் கக்ஷிக்கும், டென்மாக் நாஸிகளுக்கும் சச்சரவு ஏற்பட்டு டென்மார்க் நாஸிகள் சத்துருக்களாக பாவிக்கப்படுகின்றனர். நாஸி ஆக்கிரமணத்தை எதிர்த்து பிரசாரம் செய்வோர் கைதி செய்யப்படுகின்றனர். ஜெர்மனிக்கும் அனுப்பப்படுகின்றனர். மூன்று தடவைகள் டென்மார்க் சரித்திர ஆசிரியர் டாக்டர் லாகோர் கைதி செய்யப்பட்டார். இவனை ஜெர்மனிக்கு அனுப்பி விசாரணை செய்வது மறுக்கப்பட்டது. அனுப்பியிருந்தால் கொலை செய்யப்பட்டிருப்பான்.

**அரியதொண்டு.**

சுருங்கச் சொல்லில் ரகசியப் பத்திரிகைகள் அரிய சேவையைச் செய்து வருகின்றன. தங்களுடைய பிராணனுக்கு வரும் ஆபத்தைக்கூட கவனியாது இவைகள் தைரியமாக தஙகளுடைய வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தப் பத்திரிகைகள் இருந்து வரும் சந்தர்ப்பத்தையும் நாம் கவனிக்கவேண்டும். இவைகளின் உண்மை வெளிவந்தால் திடீரென்று இருக்குமிடத்தை விட்டு ஓடவேண்டியதுதான் எதிரிகளின் வசமாகாமலும் கைதியாகாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். ஜனஙகளின் விருப்பப்படிக்கும் நடக்கவேண்டும். அதாவது எதிரிகளிடம் லஞ்சம் வாஙகிக்கொண்டு தஙகளை ஒருவரும் காட்டிக் கொடுக்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதமாய் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளின உணர்ச்சியை இப்பத்திரிகைகள் வெளிப்படுத்துகின்றன. வால்பி என்ற பிரெஞ்சுப் பத்திரிகை கூறும் விதமாக தங்களுக்கு "நிச்சயம்" விடிமோக்ஷம் கிடைக்குமென்று நினைத்திருக்கின்றன. ஜனநாயகம் இறக்க வில்லை. இனிமேல் அதை அழிக்கவும் முடியாது. ஏனென்றால் பலமுள்ள நாடுகள் தற்சமயம் சேர்ந்து கொண்டிருக்கின்றன.

---

# ஜெர்மனியில் உள்நாட்டுப் பிரச்னைகள்.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்.)

ருஷ்யப்போர் தொடங்கியதிலிருந்து வாரத்துக்கு வாரம் யுத்தப் போக்கு மாறுபட்டு வருகிறது. அதே போலவே ஜெர்மனிக்கு வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வருகின்றன. எப்படியிருந்தாலும் அதன் முடிவைப்பற்றி ஏற்கனவே தீர்மானித்ததுதான்.

1942-ம் வருஷத்தின் உபயோகத்திற்காக ஆயுதங்கள், மற்றுமுள்ள போர் சாமான்கள் உற்பத்தி செய்வதைக் குறித்து மாரிகாலம் பூராவும் ஜெர்மானியர் கூடி ஆலோசித்து வந்தார்கள். தொழிற்சாலைகளில் அதிக அவசரமாகத் தேவையில்லாதவர்களையும், பொருள்களையும் எடுத்து எங்கெங்கு சைனியங்களும், யுத்தப் பொருள்களும் குறைவாக இருக்கின்றனவோ அங்கு அனுப்பப்படுகின்றன, அவ்வித தந்திரம் அடுத்த 6 மாதங்களுக்குள் நேசநாட்டினர் தங்களுடைய முழுபலத்தையும், முயற்சியையும் உபயோகித்து ஜெர்மனியை ஒரே அடியாகத் தாக்கும்போது பலிக்காமல் போய்விடும்.

இதன் பயன்கள் மூன்று வகைகளில் தெரியலாம். உணவு, உடை, உணவு தயாரிககவேண்டிய நிலக்கரி வகையராவும், வசிக்கக்கூடிய நிலைமையில் குறைவு போக்குவரத்துஉள்பட முக்கியமான கைத்தொழிலின் குறைவு, கைத்தொழில் ஸ்தாபன முறையில் குறைவு. அதாவது விளைபொருள்களும் அரைகுறையாக

வேலைசெய்யப்பட்ட பொருள்களும் வரிசைக்கிரமமாக அநேக மாறுதல்கள் அடைந்தது. யுத்தப்பொருள்கள் தயாரிக்கும் யந்திரசாலைக்குள் போகமுடியாமல் தடைபடுவது.

### சண்டைசெய்யும் வீரர்களுக்கு இதனால் ஏற்படும் பயன்.

இந்த மூன்று பயன்களில் ஏதாவது ஒன்று அதிகமாகப் போய்விட்டால் யுத்தப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில்லாமல் போனால் என்ன கஷ்டம் நேரிடுமோ அத்தகைய கஷ்டம் போர் படைகளுக்கும் ஏற்பட்டுவிடும். ஏனென்றால் சண்டை செய்யும் சக்தியும், ஜயிக்க வேண்டுமென்ற ஊக்கமும் ஒரே சமயத்தில் குன்றிவிடும். இத்தகைய உணர்ச்சி பொதுமக்களுக்கும் ஏற்படும் தலைவர்களுக்கும் ஏற்படும். ஏற்கனவே தொழில் குறைவு, விளை பொருள்களில் குறைவு, ஒரு பொருளுக்குப்பதிலாக மற்றொரு பொருளைக்கொண்டு ஈடுசெய்வது, கைத்தொழிலில் சோர்வு அதிகரிப்பது இவைகளினால் ஜெர்மன் தொழிலினால் உற்பத்தி செய்யும் சக்தி முற்றிலும் குறைந்துவருகிறது. யுத்த தளவாடங்கள் தயாரிப்பதில் குறுகிய காலதிட்டத்தை அனுசரிப்பதால் இதன் பயன்கள் சிறிது காலம் கிரமித்துத்தான் தெரியவரும். இப்பொழுது ஜெர்மனிக்குக் கிடைத்திருக்கும் ஓய்வு நேரத்தை யுத்தத்தை ஜயிக்க உபயோகப் படுத்துவதா அல்லது நீண்ட காலத்திற்குள் அதற்குக் கடுமையான பாதகம் உண்டாக்கக்கூடிய மேலே சொன்ன சந்தர்ப்பங்களைத் தவிர்க்க உபயோகப் படுத்துவதா என்ற பிரச்னை ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கிறது.

ருஷ்ய எதிர்ப்பை தவிர்ப்பதற்கு உடனே கைத்தொழில், யந்திர சாலைகளை அதிகரிக்கச் செய்யவேண்டும். அதற்கு வேலையாட்களும் தடங்காமல் வேலை செய்வதற்கு வேண்டிய விளைபொருள்களும் வேண்டும். அப்படிச் செய்வதற்கு குறுகிய கால திட்டத்தை மாற்றினாலொழிய வேறு வழியில்லை. 1943-ம் வருஷத்தில் ஜெர்மனி மீது படையெடுக்க நேசதேசத்தார்கள் உத்தேசித்திருப்பதையும், அப்படிபடையெடுக்க இப்பொழுதே அறிகுறிகள் காணுவதினாலும், அதற்குள் ஜெர்மனி அதன் பயன்களை மாற்ற முடியுமா என்பது இதற்குள் சொல்லிவிட முடியாது. ஆனால் ருஷ்ய எதிர்ப்பை அழிப்பதற்கு ஜெர்மானியர்கள் சென்ற மாரிகாலத்தில் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது முன்னேறி விடவில்லை.

மாரிகால உறைபனியினால் உண்டான நஷ்டத்தை ஈடுசெய்ய வசந்த காலத்தில் விசாலமான பிரதேசங்களில் விதைத்து பலனடையப் பார்ப்பதில் ஜெர்மானியர்களுக்குப் பெருத்த கஷ்டங்கள் நேர்ந்திருக்கிறது. முக்கியமாக தொழிலாளிகள் குறைவு. ஒரு ஜெர்மன் தொழிலாளிக்கு மூன்று அல்லது நாலு அந்நிய நாட்டு தொழிலாளிகள் வீதம் விவசாயத்தில் சேர்க்கப்பட்டு வேலை செய்து வருகிறார்கள். இவர்களில் சாகுபடி குடியானவர்கள் தவிர கூலிக்கு நியமிக்கப்பட்டவர்களைக் குறித்துதான் சொல்லப்பட்டது. அயல் நாட்டுத் தொழிலாளியின் வேலைத்திறமைக் குறைவைப்பற்றி ஜெர்மன் பத்திரிகைகளில் பலமாகக் கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது. வேலைக்காரர்களின் குண தோஷத்தினால் கைத்தொழிலைக் காட்டிலும் விவசாயத்தில் அதிக நஷ்டமிருப்பதாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. விதைகளும் உரங்களும் குறைவாகயிருக்கிறது. உறைபனி சேதத்தினாலும் அதிகத் தேவையிருப்பதினாலும் விதைகளுக்குத்தட்டு ஏற்பட்டிருக்கிறது. போக்குவரத்து நெருக்கடியினால் உரங்களுக்குத் தட்டு ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் பெரும்பான்மையான இடங்களில் பஞ்சம் ஏற்பட்டதினால் பயிர் விளைச்சலும், புல் உற்பத்தியும் குறைந்து விட்டது.

### ரயில்வே போக்குவரத்துகளில் சிக்கனம்.

ஜெர்மனியில் பிரயாணிகளின் ரயில் பிரயாணம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஹிட்லர் பிரகடனத்தில் ரயில்களை நடத்துவதில் பெருத்த கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிடப்பட்டது. அநேக ரயில் வண்டிகள் கோயினிக்ஸ் பர்க், ஸ்மொலன்ஸ்க் இவைகளுக்கருகில் பழுது பார்ப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது,

ஏன்ஜின்கள் தான் அதிகம் சேதமடைந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஜெர்மன் ரயில்வேக்களில் ரயில் போக்குவரத்தின் தன்மை பொதுவாகக் குறைந்து வருகிறது. ஆனால் ஸ்விட்ஸர்லாந்துக்கு வழக்கப்படி நிலக்கரி ஸப்ளை செய்யப்படுவது பாதிக்கப்படும் அளவுக்கு ரயில் போக்குவரத்து குறைந்து விட்டது.

மாரிகாலப் படையெடுப்பில் உண்டான காலதாமதமும் தடங்கல்களும் அதிகரித்துவிட்டது. லங்காஸ்டர், ஸ்டர்லிங் அல்லது ஹலிபாக்ஸ் விமானம் தூக்கிச் செல்லக்கூடிய வெடிகுண்டு எத்தன்மையது என்று சொல்லக்கூடாது. ஆனால் பிளன்ஹீம் விமானப்படைப்பகுதி பூராவும் கொண்டு செல்லக்கூடிய வெடிகுண்டுகள் அவ்வளவையும் ஒரு ஸ்டர்லிங் விமானம் எடுத்துச் செல்லுமென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

ஜெர்மனியைத் தாக்குவதற்கு அனுப்பப்படும் பாம்பர் விமானங்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பது அவ்வளவு முக்கியமில்லை. அவைகள் போடக்கூடிய வெடிகுண்டுகளின் டன் நிறை அதிகமாக இருக்கவேண்டியதுதான் முக்கியமானது. சில மாதங்களுக்கு முன் இரண்டு விமானங்களும் போடக்கூடிய வெடிகுண்டுகள் அளவுக்கு ஒரு விமானமும் ஒரு விமானியும் போடக்கூடுமானல் பின்னல் சொல்லப்பட்டதே மேலாகயிருக்கும். ஏனென்றல் இரண்டு இரட்டை என்ஜின் கொண்ட பாம்பர் விமானங்களைச் செலுத்த 10 விமானிகளும், தரைஸ்தாபனத்தில் 10 பேர்களும் வேண்டும். ஆனால் நாலு என்ஜின்கொண்ட ஒரு விமானத்திற்கு 7 விமானிகளும், தரை ஸ்தாபனத்தில் 7 பேர்களும்தான் தேவை. அந்தந்த விமானங்கள் கொண்டு செல்லக்கூடிய வெடிகுண்டுகளின் கனமானது. பாம்பர் நிலயத்திலிருந்து லக்ஷியம் இருக்கும் தூரத்தைப் பொருத்ததேயாகும்.

### விகிதம்.

நாலு என்ஜின் விமானங்களுக்கும், இரண்டு என்ஜின் விமானங்களுக்குமுள்ள விகிதத்தைப் பார்த்தால் ஒரு விமானத்திலிருந்து 2 டன்னுக்குக் கொஞ்சம் குறைவாக உள்ள வெடிகுண்டைப் போடுவதாக நாம் எண்ணிக்கொள்ளலாம். இந்தப்படி 3,000 பாம்பர்கள் ஒரு இரவில் ஜெர்மனியில் 5,500 டன்கள் நிறையுள்ள வெடிகுண்டுகளையும், தீக்குண்டுகளையும் போடக்கூடும்.

நம் தேசத்தில் எதிரி கடுமையாகத் தாக்கின இரவில்கூட 600 டன்களுக்கு மேல் போடவில்லையென்று ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் பிரிடிஷ் பாம்பர்களால் போடக்கூடிய அதிக கனமுள்ள வெடிகுண்டுகளினல் உண்டாகும் பயன் எப்படியிருக்குமென்பதை ஊகித்துப் பார்க்கலாம்.

---

# "ஹிட்லரை இவ்வருஷத்தில் முறியடித்து விடுவோம்."

ருஷ்யாவின் பிரஸிடெண்டு மைகேல் கலினின் எழுதியது.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம் கிடைத்தது.)

ஒரு வருஷத்திற்குமுன்பு ருஷ்யாவைப் படையெடுக்கப் போவதாக ரேடியோவில் நாஸிகள் சொன்னர்கள். உடனே படையெடுப்பு ஆரம்பமாயிற்று. இந்த ஒரு வருஷகாலமாக நாஸிகள் செய்த கொடிய யுத்தத்திலிருந்து அவர்களுக்கு ராணுவ சம்பந்தமான அறிவே இல்லை என்று காண்பித்துக்கொண்டார்கள்.

அவர்கள் போட்ட திட்டப்படி ருஷ்யா மூன்று, நான்கு மாதங்களுக்குள்ளோ, மாரிகாலத்திற்குமுன்னமேயோ தோற்கடிக்கப்பட்டிருக்வேண்டும். ஆரம்பகாலத்தில் ஜெர்மானியர் வேகமாகவே முன்னேறினர்கள். அவர்களின் வெற்றிகளைப்பற்றி உலகம் பூரா அறிவித்துக்கொண்டும் இருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் லியோ டால்ஸ்டாய் எழுதிய சிறு கதையொன்று ஞாபகத்திற்கு வருகிறது. "ஒரு மனிதனுக்கு எவ்வளவு விஸ்தாரமான பூமி வேண்டும்?". அதாவது கொஞ்சம் பணம் கொடுத்தால், காலை முதல் மாலைவரை ஓடி சுற்றிவந்தால் கவரக்கூடிய பிரதேசம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஒருவன் களைக்கும்வரை

வேகமாக ஓடி ஆரம்ப ஸ்தலத்திற்கு வந்தான். ஆனால் அங்கே வந்ததும் களைப்புத் தாங்காமல் இறந்துவிட்டான். கடைசியாக அவனைப் புதைப்பதற்கு ஆறு அடி பூமிதான் தேவையாக இருந்தது.

அதே விதமாக ஹிட்லரின் படைகளுக்கு ருஷ்யாவில் இடம் கிடைத்திருக்கிறது. ருஷ்யப் பிரதேசத்தில் லக்ஷக்கணக்கான பேர்களுக்கு இந்த இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## கடுமையான எதிர்ப்பு.

ருஷ்ய மக்கள் தலைவரின் அழைப்பிற்கு இணங்கி எதிரியைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். நாஸிகள் சில ருஷ்யப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்ட காலத்தில் ருஷ்ய ரயில்வே தொழிலாளர்கள் எஞ்ஜின்களையும், வண்டிகளையும் அப்புறப்படுத்திவிட்டனர். தொழிற்சாலை சாமான்களும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. கூட்டுப் பண்ணையிலிருந்த ஆடு மாடுகளும் மாற்றப்பட்டன. இவ்விதம் எடுத்துச் செல்ல முடியாத சாமான்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பேர்கள் கொரில்லாப் படைகளில் சேர்ந்துள்ளனர்.

மாஸ்கோ சபைமுன்பாக 1941-ம் வருஷம் நவம்பர் மீ 6உ ஸ்டாலின் பேசுகையில் "நமது சைனியத்திற்கும், கப்பற்படைக்கும் தேசத்தின் பூரா உதவியும் இருக்கவேண்டும். தொழிற்சாலைகளில் யாவரும் ஓயாமல் ஈடுபட வேண்டும். அதிகமான டாங்கிகளும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும், விமானங்களும் பீரங்கிகளும், சுரங்க வெடிகளைப் பாவுகிறவர்களும். யந்திர பீரங்கிகளும், துப்பாக்கிகளும், யுத்த சாமான்களும் தொழிற்சாலைகளில் செய்யப்படவேண்டும். தானியங்களையும் மாமிசத்தையும் கூட்டுத் தோட்டங்களில் செய்து போர்முனைக்கு அனுப்பவேண்டும். தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களைச் செய்து அனுப்பவேண்டும். தேசத்தின் மக்கள் பூராவும் சைனியத்திலும், கப்பற்படையிலும் சேர்ந்து தேசத்தின் கௌரவத்தையும், ஸ்வதந்திரத்தையும் காக்கவேண்டும். எதிரிகளையும் அழிக்கவேண்டும்."

## ருஷ்ய செஞ்சேனை முன்னேற்றப்போரைச் செய்கிறது.

அது முதல் ருஷ்யச் சைனியம் முன்னேற்றப்போரை நடத்திவருகிறது. மாஸ்கோவைப் பிடிக்கும் நோக்கத்தை எதிரிகள் இன்னும் விடாத போதிலும் ரோஸ்டவ், டிக்வின் இவைகளுக்கு அருகில் அடைந்த தோல்விகளால் ஹிட்லரின் படைகள் வெகுதூரம் ஓட வேண்டி வந்தது. ஜெர்மன் சைனியத்தில் பலர் இறந்தனர். சாமான்களும் சேதமும் அதிகம். மேற்கு நோக்கி ஓட்டம் பிடித்தனர். அவர்களுக்கு வெற்றியில் நம்பிக்கை போய்விட்டது. செஞ்சேனை தற்காப்புப் போரை முன்னேற்றப்போராக மாற்றிக்கொண்டு ஜெர்மானியரை விரட்டியது.

மே 1உ போட்ட உத்தரவில் ஸ்டாலின் ருஷ்ய மக்களை 1942-ல் "ருஷ்ய யுத்தத்தை முடித்து ருஷ்யாவை விடுவிக்கவேண்டுமென்று" சொன்னார். அவர் சொன்னதாவது "இவ்வித லக்ஷியத்தை அடைவதற்குப் போதுமான சாதனங்கள் இருக்கின்றன. ஒன்று மாத்திரம் குறைவாக இருக்கிறது. கிடைக்கும் சாமான்களெல்லாவற்றையும் எதிரிக்கு விரோதமாக உபயோகிக்க முடியவில்லை. ஆகவே ருஷ்யக் காலாட்படை, பீரங்கிப்படை, யந்திர பீரங்கிப்படை, மோட்டார் ஓட்டிகள், டாங்கி ஆட்கள், விமானிகள், குதிரைப்படை யாவும் யுத்த தந்திரத்தை நன்ருகக் கற்றுக்கொண்டு, சாமார்த்தியத்தைப்பெற்று எதிரிகளைத் தாக்கவேண்டும். அப்பொழுதுதான் எதிரியைத் தோற்கடிக்க முடியும்."

## ஜெர்மன் சைனியம் முன்போல் இல்லை.

ராணுவ நிலைமையைப் பார்த்தால் பூராப் போர்முனையிலும் ஜெர்மானியரால் சமாளிக்க முடியவில்லையென்று தெரிகிறது. யுத்தம் ஆரம்பித்த காலத்தில் இருந்தமாதிரி இப்போது இல்லை. சக்தி குறைந்துவருகிறது. ருஷ்ய-ஜெர்மன் யுத்த அரங்கம் பூராவும் தனிப்பட்ட பிரதேசங்களில்தான் ஜெர்மானியர் சண்டை செய்யமுடியும். ஆனால் அவர்களுக்கு அதிகச் சேதம் ஏற்படும்.

ஓரிடத்தில் சிறிது வெற்றிபெற்றதும் அதை வைத்துக்கொண்டு பிரமாதமாகப் பிரசாரம்செய்து ஏமாற்றிவந்தனர். ஹங்கேரி, ருமேனியா, இதாலி முதலிய நாட்டுப்படைகளை அகற்றிவிட்டால் ஜெர்மனியின் நிலைமை மோசமாகிவிடும். மூலப்பொருள்கள், உணவு முதலியவைகளை அடைவதற்காகவே ஜெர்மனி இந்நாடுகளுடன் உறவு கொண்டாடுகிறது. 1941-லிருந்த மாதிரி ஜெர்மன் சைனியம் இல்லை. பலர் அடங்கிய சைனியமாக இருக்கிறது.

ஜெர்மனி அடைந்துவரும் தோல்வியின் காரணமாக ஜெர்மன் மக்களுடைய தைரியம் குறைந்துவருகிறது. யுத்தத்தைப்பற்றிய அக்கரையும் குறைந்து வருகிறது.

## ஆபத்து பின்புறம்.

ஆக்கிரமித்த நாடுகளில் கொள்ளையடிப்பதாலும் ருஷ்யப் படையின் தாக்குதல் ஏற்படுவதாலும் ஆங்காங்குள்ள தேசபக்தர்களுக்கு உணர்ச்சி அதிகரிக்கிறது. இதனால் ஐரோப்பாவில் ஜெர்மனிக்கு ஆபத்துதான். இதைத் தவிர்க்க அதிகமான போலீஸ் படைகளை நாஸிகள் நியமித்துவருகின்றனர்.

நாஸி வசப்பட்ட ருஷ்யாவில் கொரில்லாப்படை அதிகம் உண்டாகி தினம் நாஸிகளைத்தாக்குகின்றன. "கொரில்லாத் தாக்குதல்களின்பேரில் அதிக வெற்றி கிடைத்ததாகவே" ஜெர்மானியரும் சொல்லுகின்றனர். அதாவது கொரில்லாப் படையிடமிருந்து சில 10, 15 ஸ்தலங்களைப் பிடித்ததாகப் பெருமைப்படுத்திக் கொள்ளுவார்கள். ஆனால் தங்களை பலமாகத்தாக்கி நகரங்களிலிருந்து விரட்டுவதைப்பற்றிச் சொல்லமாட்டார்கள். சண்டை போகப்போக கொரில்லாத் தாக்குதல் கடுமையாகிவிடும். ஜெர்மன் துருப்புகளேற்றப்பட்ட பல ரயில் வண்டிகள் கவிழ்க்கப்பட்டிருக்கின்றன. தினச்சண்டைகளில் பல நாஸிப்படைகளும் அழிக்கப்பட்டிருக்கின்றன.

## செஞ்சேனையின் உணர்ச்சி.

பொதுமக்களின் உணர்ச்சிக்குத் தகுந்தவாறு சேனையும் நடந்துகொள்ளுகிறது. ஏனென்றால் தாய்நாட்டின் கௌரவத்தை ஒவ்வொரு சிப்பாயும் அறிந்திருக்கிறான். இந்த பலத்துடன் எதிரியை எதிர்க்கமுடிகிறது.

நமது தொழிற்சாலைகளில் சாமான்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. யுத்த சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளப்படுகிறது. சைனியத்திற்கு சாமான்களின் உதவி அதிகரித்து வரும் விஷயம் நமக்குத் திருப்தியளிக்கிறது. யுத்தகால சிரமங்களிருந்தபோதிலும் அதிக பாகம் உழுது 'பயிரிடப்பட்டிருக்கிறது.' குடியானவர்களும் சமயத்திற்கேற்றவாறு நடந்து கொண்டிருக்கின்றனர்.

## சரியான பொருளாதார திட்டம்.

நமது தேசத்தின் பொருளாதாரத் திட்டம் சரியான அஸ்திவாரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஜனங்களும் தைரியமாக இருக்கின்றனர். எதிரியை எப்படியாவது துரத்தவேண்டுமென்று நினைத்திருக்கின்றனர்.

அயல்நாட்டு சம்பந்தமும் திடமாக இருக்கிறது. ஜெர்மன் படையெடுப்பு ஆரம்பமானது முதல் பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவிற்கு உதவுவதாகச் சொல்லின. சமீபத்தில் பிரிடனுடன் ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தாகி இருக்கிறது. அமெரிக்கா சண்டையில் ஈடுபட்டிருக்கிறது. அமெரிக்காவுடனும் ஒரு சிநேக ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நாடுகள் நமக்குக் கொடுக்கும் உதவியை அதிகமாகவே செய்யும்.

வெற்றி நிச்சயம் கிடைக்குமென்று ருஷ்ய மக்களும் நினைத்திருக்கின்றனர். எதிரி இன்னும் தோற்கடிக்கப்படவில்லை. அவனுக்கு இன்னும் உதவி இருக்கிறது. நிலைமை மோசமாகிப் போகப்போக தீவிரமான பிரயத்னத்தைச் செய்வார்கள்.

ஹிட்லர் தோற்கடிக்கப்படுவது நிச்சயம். இதற்காக ருஷ்யர்கள் எல்லா இடங்களிலும், போர் அரங்கத்திலும், உள்நாட்டிலும் எல்லாவித முயற்சிகளையும் செய்யவேண்டும். சிரமங்களைக் கண்டு களைக்க மாட்டார்கள். எதிரியைச் சீக்கிரம் தோற்கடிக்க முயற்சிக்கவேண்டும்.

# மார்டின் மார்ஸ்.

(*With acknowledgments to the Illustrated Weekly of India*).

## யுத்தம் பூராவும் விமானப் படை பலத்தின் உதவியால்தான் ஜயமடையவேண்டும்.

லிபியாவிலும், பஸிபிக் யுத்தப்பிராந்தியங்களிலும் தற்சமயத்தில் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதுதான் மெத்த அவசியமாகத் தெரிகிறது. துருப்புகளையும், யுத்தப்பொருள்களையும் இன்னும் தபால் முதலியவைகளையும், அமெரிக்காவுக்குச் சொந்தமான இவ்வுலகத்திலுள்ள பல எல்லைப்புற ஸ்தலங்களுக்கும் ஆகாய மார்க்கமாக அனுப்ப ராணுவ ஆகாயப்போக்குவரத்துத் திட்டம் இப்பொழுது தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் சமீபகாலத்தில் சமுத்திரத்தில் அதிகமாக நேரிட்டு வந்த நஷ்டங்கள் தடுக்கப்படும். நீராவிக் கப்பல்கள் கட்டுவதைக் காட்டிலும் ஆகாய விமானங்களைச் சுலபமாகவும், வெகு சீக்கிரத்திலும் கட்டி முடித்துவிடலாம். "தரையிலும், சமுத்திரத்திலும் ஊர்வது போல் மெதுவாகச் செல்லும் யுத்த தளவாடங்களின் உற்பத்தியைக் குறைத்து, எல்லாவற்றையும் ஆகாய விமானங்கள் கட்டுவதில் செலவு செய்வோம்" என்று பிரக்யாதிபெற்ற விமானியும், விமானங்கள் உற்பத்தி செய்கிறவருமான மிஸ்ட்டர் கௌன் மார்டின் சொன்னார்.

புதிய வேவுபார்க்கும் விமானத்திற்கு மார்டின் மார்ஸ் என்று சொல்லப்படுகிறது. அதையே அமெரிக்கக் கப்பற்படையின் ஆகாய யுத்தக் கப்பல் என்றும் சொல்லப்படுகிறது. அவ்வளவு பெரிய விமானம் இதுவரை கட்டப்படவில்லை.

1937-ம் ௵த்தில் அமெரிக்கக் கப்பற்படை இலாகா உலகத்திலுள்ள விமானங்களைக்காட்டிலும் மிகப்பெரிய விமானமொன்றை கட்டவேண்டுமென்று பிரசுரித்தபொழுது, மார்டின் விமானமே பரிசுபெற்றது. மிகவும் திறமையுள்ள விமான எஞ்ஜினியர்களின் ஒரு பகுதி இந்த வேலையை ஒப்புக்கொண்டு அதற்கு நூதன முறைகளைக் கண்டுபிடித்தார்கள். அதிலுள்ள பல உருப்புகளுக்கு 12,600 படங்கள் வரையப்பட்டன.

1940-ம் ௵ ஆகஸ்டு மாதத்தில் மார்ஸ் என்ற கப்பலின் அடிபாகம் கட்டப்பட்டது. அதற்கு அமெரிக்கக் கப்பற்படை இலாகா ஆதரவளித்தது. அது கப்பற்படை சங்கக்கட்டடத்தில் கட்டப்பட்டது. 1941-ம் ௵ ஜூலை மாதத்தில் 20,000 பவுண்டு நிறையுள்ள இறக்கைகள் அவ்விமானத்தில் பொருதப்பட்டன.

### பலத்தின் பரிசோதனை.

ஸெப்டம்பர் ௴ 8-ம் தேதி எஞ்ஜினியர்களின் ஸ்தாபனம் அவ்விமானம் தரையிலிருக்கும் ஸ்திதியிலேயே, அதன் இறக்கைகள், யந்திரம் இவற்றின் பலத்தை ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட காலமாகத் தயாரிக்கப்பட்ட கருவியின் உதவியினால் பரிசோதித்தது. அந்த இறக்கைகளின் பேரில் 5 லக்ஷம் பவுண்டு கனத்திற்கு மேல் ஏற்றிவைக்கப்பட்டதை அவைகள் தாங்கின. இவ்விதம் பரிக்ஷை செய்துமுடிக்க 5 நாட்கள் பிடித்தன.

இந்த பறவைக்கப்பல் 170 அடி நீளமுள்ளது. அதன் இறக்கைகள் 200 அடி வரை விஸ்தாரமுள்ளது. அது கீழேயிருக்கும்பொழுது அதன் இறக்கைகள் 20 மாடிகள்கொண்ட பெரிய கட்டடம் போல் அவ்வளவு உயரமாக இருக்கும். இறக்கைகளின் மத்தியபாகங்களில் விமானிகள் தாராளமாக நடந்து செல்லக்கூடும். பறந்துகொண்டிருக்கும் பொழுதே அங்கிருந்து கொண்டு யந்திரங்களில் பழுது பார்க்கவும் கூடும்.

இந்த பறவைக்கப்பல் 8,000 H. P. கொண்டது. மின்சார டிஸல் எஞ்ஜின்கள் இரண்டின் சக்தியைப்போல் இரண்டுமடங்கு அதிகமுள்ளது. விமானத்தை ஓட்டும் யந்திரமானது இதுவரையில் கட்டப்பட்ட எந்த விமானத்தைக் காட்டிலும் மிகப்பெரிதானது.

அக்கப்பலில் முக்கிய உத்தியோகஸ்தர்கள் தங்குவதற்கு ஒரு அறையும், பிரயாணிகள் இளைப்பாற வசதியுள்ள இடமும் இருக்கின்றன. தலைமை உத்தியோகஸ்தர் இருக்கும்படியான உயர்வான இடமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவருக்குத் தனி அறையும் உண்டு.

அதில் இரண்டு போஜன அறைகளும், இரண்டு ஸ்நான அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சராசரியாக அதில் 11 மாலுமிகள் செல்வார்கள். 150 சிப்பாய்கள் அவர்களுடைய ஆயுதங்களுடன் அதில் ஏறிச்செல்லக்கூடும். ஒரு மோட்டார் படகைத் தூக்கிச் செல்லக்கூடிய விமானம் இதுவே.

'மார்ஸ்' என்ற விமானம் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு ஒரு இடத்திலும் தங்காமல் போய் திரும்பிவரக்கூடிய சக்தி வாய்ந்தது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

### பிரஸங்கம் 104—(1-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஜுலை ...18, | சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை | 6.45 |
| 19, | ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| 20, | திங்கட்கிழமை ... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |
| 21, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| 22, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை. ... | ,, | 6.30 |
| 23, | வியாழக்கிழமை ... | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| 24, | வெள்ளிக்கிழமை... | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 105—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 25, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 26, | ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.30 |
| | | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| 27, | திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| 28, | செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | நல்லூர் ... | மாலை | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| 29, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | வெங்களூர் ... | மாலை | 6.00 |
| | | கோனபட்டு ... | ,, | 6.30 |
| 30, | வியாழக்கிழமை ... | பனையபட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| 31, | வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிர்சார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கோண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கோடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 18— 7—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 19— 7—42 | ... | கொடம்பாலூர். |
| திங்கட்கிழமை | ... | 20— 7—42 | ... | கீரனூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 21— 7—42 | ... | குடுமியாமலே. |
| புதன்கிழமை | ... | 22— 7—42 | ... | கரம்பக்குடி. |
| வியாழக்கிழமை | ... | 23— 7—42 | ... | ஆலங்குடி. |
| வெள்ளிக்கிழமை | ... | 24— 7—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 25— 7—42 | ... | விராச்சிலே. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 26— 7—42 | ... | ஏம்பல். |
| திங்கட்கிழமை | ... | 27— 7—42 | ... | அரிமளம். |
| செவ்வாய்க்கிழமை | ... | 28— 7—42 | ... | கோனுபட்டு. |
| புதன்கிழமை | ... | 29— 7—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 30— 7—42 | ... | குழிபிரை. |
| வெள்ளிக்கிழமை | ... | 31— 7—42 | ... | புதுப்பட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—19-7-42.